T03036
R001G07
3036

...al 22504
1969

2 3 JAN 1969
THE TANJORE ... TANJORE.

3036

உ

சிவமயம்.

கோவிலூர் மடம்

ஸ்ரீ அருணசல ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்கள்

திரட்டிய

# சீடாசார மூலமும்,

திருக்களர்

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்கள்

மாணக்கர்

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்

இயற்றிய

# போதிநி என்னும் உரையும்.

இவை

சிதம்பரம் - கோ. சித. மடம்

ஸ்ரீ சித. நீல கண்ட ஸ்வாமிகள்

அவர்களால், பரிசோதிக்கப் பெற்று,

மதுரை

ஹிந்துஸ்தாந் பிரிண்டிங்

ஆபீசில் அச்சிடப் பெற்றன.

விலை அணு]　　1950　　[எட்டு

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 9 | ஞாநாச்சாரியாரது | ஞாநாச்சாரியர. |
| 16 | 21 | அனைத்தைபும் | அனைத்தையும் |
| 21 | 24 | விருளுறு | இருளுறு |
| 23 | 9 | போதாமிர்த | போதாமிர்தம் |
| ,, | 10 | சொல்லதும | சொல்லதும் |
| 28 | 8 | பிரிது | பிறிது |
| 29 | 7 | தலைவற் | தலைவர்க் |
| 31 | 17 | — | (எ-று.) |
| 32 | 26 | மிலதேன | மிலதேன் |
| ,, | 27 | விறைவன | விறைவன் |
| 35 | 24 | — | (எ-று.) |
| 37 | 8 | எழுவல் | கழுவல் |
| | ,, | கழுவாய் | எழுவீர்ய் |
| 38 | 18 | தடியாக | தடியா |
| 48 | 26 | வகண்டார்த | வகண்டார்த் |
| 51 | 27 | எவல் | ஏவல் |
| 54 | 8 | கட்டு | கட்கு |

# முக வுரை.

இந்தச் சீடாசாரம் என்னும் நூல் கோவிலூர் மடாலயம் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிகர் ஆதீநத்தில் இரண்டாவது குரு மூர்த்தமாக எழுந்தருளியிருந்த துறவு ஆண்டவர் என்னும் காரணப் பெயர் வாய்ந்த அருணசல ஞான தேசிக ஸ்வாமிகள் என்பவர்கள் தமது தம்பி யாகிய சிதம்பர ஞான தேசிகர் தமது ஆசாரியரை அகன்று ஆ ளுடையார் கோவிலிற் சென்று ஏகாந்த ஸ்தாநத்தை யடைந்திருக்கக் கருதிச் சென்றதைக் கேள்வியுற்று, ஆசாரியரை விட்டு அகலாது அருகி லிருக்க வேண்டு மென்னும் கருத்துட் கொண்டு, அவ் வுடன் பிறந்த, சிதம்பரம் என்றும், கருணை நிதி யென்றும், வழங்கும் இளையோர் பொருட்டு ஒரு வசநம் எழுதி அதற்குப் பிரமாண மாகத் தத்துவ ராய ஸ்வாமிகள் பெருந் திரட்டுக் குறுந் திரட்டுக்களை ஆதரவாய்க் கொண்டு, வாசிஷ்டச் செய்யுள் 1. ஒழிவி லொடுக்கச் செய்யுள் 1, சிவ நெறிப் பிரகாசச் செய்யுள் 1, சிவாநந்த நிலையச் செய்யுள் 1, போத சாரச் செய்யுள் 1, சிவப் பிரகாச தரிசநச் செய்யுள் 1, தத்துவ போதச் செய்யுள் 1, தத்துவ சரிதைச் செய்யுள் 1, ஞாந சித்திச் செய்யுள் 1, போத சித்திச் செய்யுள் 1, திரு மந்திரச் செய்யுள் 1, பாடு துறைச் செய்யுள் 1, சமய சாரச் செய்யுள் 2, மெய்ந் நெறி விளக்கச் செய்யுள் 2, போத ரத்நாகரச் செய்யுள் 2, அருட் பிர காசச் செய்யுள் 3, மூல சித்திச் செய்யுள் 3, ரிபு கீதைச் செய்யுள் 3, போதாமிர்தச் செய்யுள் 4, ஞாந சாரச் செய்யுள் 4, மெய்ம் மொழிச் செய்யுள் 6, பிரஹ்ம கீதைச் செய்யுள் 7, நூற் பெயர் தெரியாச் செய்யுள் 2 - ஆக ஐம்பது செய்யுட்களைத் திரட்டி எழுதி யநுப்பி னார்கள். அந் நூல் படிக்கும் சிறிய முமுக்ஷுக்கட்கு உரை யின்றி பொருள் விளங்கல் அருமை யெனக் கருதி, பொருள் எளிதில் விளங்கு மாறு பால போதிநி என்னும் பெயருடன் ஓர் உரை எழுதி முற்றுவித்தனம்.

15—2—50 கா. சுவாமிகள், திருப் பூவணம்.

உ

சிவமயம்.

# சீடாசாரம்.

முதல் நினைப்பு(க் கவி 51.)

பன்னிரு சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

கூதை ஆனை தந்தைதாய் தந்தை தா யாமுத்தி
என் ஞான ஆர்விடத்தி

சுருதி எண் பருகட்டு உருதேசி கன்பதம்
திகழுமுடி தரிசில்நேச;

சிதை என்ற நிறம் அருள வெஞ்சொலும் ஆத இறை
போற்றுநீர் தன்னு தநமா

சென்ற போ குரவனுர் எப்ப இப் பரிபெரு
சாற்றி வேற் அறை தேசிகன்,

வதை குரவ னே சற்கு அருவெனும் கு ருபரனே
தந்தை முதல் இந்த குருபா

வரு ஆசி தேசிகரு குருபரனு தேசிகன்
பால்விடை உ டற்கு ஆசான்,

பதை கமல மநுதிநந் தொழுபவர்கள் வல்வினைப்
பற்றுகளி யாவுநீங்கிப்

பன்னிருக ரக்தகனை யீன்றநட ராஜனைப்
பற்றிவீ டடைத வாரே.

சிவமயம்.

அருணாசல ஞான தேசிகர்
சிதம்பர ஞான தேசிகர் பொருட்டு எழுதிய

## சீடாசார வசநம்.

ஸ்திரீ நாயகனோடு கூட இருந்தால் பணிவிடை செய்யவேண்டும் என்றும், தனித்து இருந்தால் சுகமாய் இருக்கலாம் என்றும் நினைத்து, அந்த நாயகனுக்கு மந வருத்தம் உண்டாகும்படி அவனை விட்டு நீங்கி இருந்தால், இம்மையில் சுகமும் இழந்து, மறுமையில் நரகத் துன்பமும் அநுபவிப்பது போல, சிஷ்யன் ஞாநாசாரியரைத் தேடிக் கண்டு சரணாகதி யடைந்து சில சாஸ்திரங்களை அப்பியாசித்து அறிந்த பின், "நாம் இனி இவரிடத்தில் இருந்தால் இவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்க வேண்டும் நமது சிரவணாதி அநுசந்தாநத்திற்கு விரோதம் வரும் இவரிடத்தில் இருக்கில் நமது சரீரத்துக்கு ஒத்துக்கொள்ளாது" எனக் கருதி, அந்த ஞாநாசாரியருக்கு மநதில் துவேஷம் உண்டாகும்படியாக அவரை விட்டு நீங்கியிருக்கின், அவனுக்கு இம்மையில் துன்பமும், மறுமையில் நரகமும் உண்டாகும். ஆகையால், கற்புடைய ஸ்திரீ அறியாமையைப் பொருந்தி யிருந்தும், ஆத்ம ஸ்வரூபத்தினை அறியாமல் அநாத்ம ஸ்வரூபமே தான் என்றிருக்கின்ற தனது நாயகனைத் தெய்வமாகப் பாவித்து, அவன் அடித்தல் வைதல் முதலியவற்றைச் செய்த போதிலும், அவனிடத்தில் துவேஷம் இன்றிப் பிரியமாகவே தேகம் உள்ள வரை அவனை விட்டு நீங்காமல் திரிவித காரணங்களாலும் பணிவிடை செய்துகொண் டிருக்க, இம்மையிற் சுகத்தையும், மறுமையில் ஸ்வர்க்காதி லோகத்தையும், அடைவது போல, உத்தம விவேகம் உள்ள சிஷ்யன், ஞாநாசாரியரைச் சத்திய ஞாந அநந்த ஆநந்த பரம சிவம்" என்று வேதாதிகள் சொன்ன பிரகாரம் நம்பி, அவர் அடித்தல் வைதல் முதலியவற்றைச் செய்யினும், செய்யத் தகாத கிருத்தியங்களைச் செய்யச் சொன்ன போதிலும், வெறுப் படைந்து அவரை விட்டு நீங்காதபடி மிகுந்த பிரியத்தோடு தேகம் உள்ள வரையும் திரிவித கரணங்களாலும் பணிவிடை செய்து நின்று, அந்த ஞாநாசாரியர் கிருபையினால் தத்துவ ஞாநத்தினைப் பெற்று மோக்ஷம் அடைய வேண்டும் என்று வேதாகம புராண இதிகாசாதிகள் கூறுதலால், இப்போ திருக்கின்ற முமுக்ஷுக்களும் இதிற் சொன்ன பிரகாரம் ஞாநாசாரியரைப் பரம சிவம் ஆகப் பாவித்துத் தேக உள்ள பரியந்தமும் அவரை விட்டு நீங்காமல், திரிவித கரணங்களானும் பணிவிடை செய்து நின்று அவர் கிருபையால் உண்டாகாநின்ற தத்துவ ஞாநத்தினால் பரமோக்ஷ சுகத்தை யடைய வேண்டியது. சீடாசார வசநம் முற்றுப் பெற்றது.

# பாயிரம்.

திருவளர் துறவைச் சுகரென விளக்கித் திகழ்குணங் களுக்குறை விடமாய்த், தெருளொடு பத்தி கருணைநல் விராகஞ் சேர்ந்தொரு வுருவமா யிலகும், மருளடு மருணு சலமுநி பதத்தை மநமொழி மெய்களால் வணங்கி, யிருளிரி சீடா சாரத்தி னுரையை யியம்புவன் மாண்வர் மகிழ.

அதனது நாமம் பாலபோ திநியென் றழகுற விருப்புட னமைத்து, விதமுறு பாவி னைம்பதின் பொருளும் விளங் கவே செவ்விய மொழியி, லிதமாய்த் தருகேன் மாணவ னிராசு வியம்பவே யவன்பணி வசமாய்த், திதம்பெறச் செய்த வுரையினை வீர சேகர விறைபதஞ் சேர்ப்பாம்.

முன்னோர்செய் ஞாந நூல்கள் முழுதுமாய்ந் தவையி லுள்ள, பொன்னுன சீடா சாரம் பொருந்துபா வினைத்துஞ் சேர்த்தான், இந்நாளி லெவரு முய்வா னெழிலரு ணாச லேசன், பன்னுளு மவன்பொற் பாதம் பணிந்துபற் றறுப்பா மன்றே.

சிவமயம்.

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகாய நம :

# சீடாசாரம் மூலமும், பால போதிநி உரையும்.

தான் எடுத்துக் கொண்ட கிரந்தம் நிர்விக்கிநமாக நிறைவேறும் பொருட்டுச் சகுண ரூப ஷட் வித தெய்வ வணக்கம் கூறுகின்றார்.

காப்பு.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபோ னம்பலவன்
ஞாநகுரு வாணியையுண் ணாடு.

(இதன் பொருள்.) ஆனை முகன் - கஜ முகக் கடவுளையும், ஆறு முகன் - ஷண்முகக் கடவுளையும், அம்பிகை - சிவகாம சௌந்தரியையும், பொன் அம்பலவன் - கநக சபைக் கடவுளை யும், ஞாந குரு - ஞாந ஆசாரியாரையும், வாணியை - சரஸ்வதி தேவியையும், உள் - மநத்தின்கண், நாடு - (நீ) தியாநிப்பாயாக. (எ-று)

(இலக்கணக் குறிப்பு:-) 'ஆனை முகன், ஆறு முகன்' என்ப வாதி பெயர்க ளிடையே எண் ணும்மைகள் தொக்கு நின்றன- 'வாணியை' என்பதி லுள்ள 'ஐ' என்னும் இரண்ட னுருபு கடை நிலைத் தீபகம்; முன் னுள்ள பெயர்களோடு சென் றியைதலின், 'நீ' என்னும் தோன்றா எழுவாய், 'நாடு' என்னும் பய னிலை கொண்டது. ஆனை முகன் முதலிய மூர்த்திகள் - செயப்படு பொருள்.

## மோக்ஷ ஹேதுவினைக் கூறல்.

**1.** தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ் சாலுங் கல் வியுந் தகுமுயிர்த் துணையுஞ், சிந்தை யாருநற் சீலமும் வலியுந் திருவு மின்பமுஞ் சிதைவிலா வறிவு, முந்தை யா முளத் துவகையு முயிரு மூல முத்தியு மொழிவருஞ் சமைவு, மெந்தை யாகிவந் தேழையே னையுமா ளிறைவ ஞர்கழக லாகுமேன் றனக்கே.

*(இ—ள்) எந்தை ஆகி - எம்முடைய (ஞாந) பிதா வாகி, வந்து - (கருணையினால் எழுந்தருளி) வந்து, ஏழையேனையும் - (ஞாநம் இல்லாத) எளியவனாகிய என்னையும், ஆள் - (தடுத்து) ஆட் கொண்ட, இறைவனார் (பிரஹ்ம ஞாந) ஆசாரியரது, கழல் - திருவடி (த் தாமரை)யே, என் தனக்கு - எனக்கு, தந்தை - தந்தையும், தாயும் - மாதாவும், மெய் - யதார்த்தமான, தகவு உடை - தகுதி உடைய, உறவும் - சுற்றத்தார்களும், சாலும் - உயர்ந்த, கல்வியும் - வித்தையும், தகும் - தகுதியான, உயிர் - ஜீவனுக்கு, துணையும் - ஆதரவும், சிந்தை - மநத்தின் கண், ஆரும் - பொருந்தியிருக்கின்ற, நல் - உயர்ந்த, சீலமும் - ஒழுக்கமும், வலியும் - சாமர்த்தியமும், திருவும் - ஐசுவரியமும், இன்பமும் - ஆநந்தமும், சிதைவு இலா - கெடாத, அறிவும் - ஞாநமும், உளத்து - மநத்தின்கண், முந்தை ஆம் - முதன் மையான, உவகையும் - சந்தோஷமும், உயிரும் - பிராணனும், மூலம் - காரணமான, முத்தியும் - மோக்ஷமும், மொழிவு - கூறற்கு, அரும் - அரிய, சமைவும் - பொறுமையும், ஆகும் - (ஆகிய பதி னன்கும்) ஆம். (எ—று.)*

*(இ—பு-) தந்தை தாய் - உம்மைத் தொகை. ஏழை யேனை யும் - உம் - இழிவு சிறப்பும், இறந்தது தழீஇயது மாம். பக்குவி களையும் குறித்தலின். ஏனைய உம்மைகள் எண்ணுப் பொருளன.*

ஈற்று ஏகாரத்தைக் கழலோடு பிரித்துக் கூட்டிப், பிரி நிலை, அல்லது, தோற்றமாகக் கொள்க. எம்—தந்தை — 'எந்தை' என மரீஇயிற்று. 'பண்டு—காலம்—பண்டைக் காலம்' என்றாற் போல, 'முந்து' என்பது, 'முந்தை' என ஐ காரச் சாரியை பெற்றது. 'கழல்' என்னும் எழுவாய், ஆகும் என்னும் பய னிலை கொண்டது. 'என் தனக்கு' என்பதில், தன் சாரியை.

## பாடு துறை.

2. தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு,
மந்தமிலா வின்பநமக் காவானு - மெந்தமுயிர்,
தானுகு வானுஞ் சரணுகு வானுமருட்,
கோனுகு வானுங் குரு.

(இ—ள்.) இங்கு - இவ் வுலகத்தின்கண், நமக்கு - எமக்கு, குரு - (ஞாந) ஆசாரியரே, தந்தை - பிதாவும், தாய் - மாதாவும், ஆவானும் - ஆகுபவனும், சார்- அடையும்படியான, கதி - ஐசுவரியம், ஆவானும் - ஆக உள்ளவனும், அந்தம் இலா - நாசம் அற்ற, இன்பம் - ஆநந்தம், ஆவானும் - ஆகுபவனும், எம் - எமது, உயிர் - பிராணன், ஆகுவானும் - ஆகுபவனும், சரண் - அடைக்கலம், ஆகுவானும் - ஆகுபவனும், அருள் - அநுக்கிரகஞ் செய்கின்ற, கோன் - இறைவன், ஆகுவானும் - ஆகுபவனும், ஆவர்). (எ—று)

(இ—பு:) உம்மைகள் அனைத்தும் எண்ணுப் பொருளன. எந்த முயிர் தான்—தம் - தான் இரண்டும் சாரியைகள். 'குரு' என்னும் எழுவாய்க்கு, 'ஆவர்' என்னும் பய னிலை, அவாய் நிலையால் வருவிக்கப் பெற்றது.

## மெய்ம் மொழி.

3. முத்திசித் திக்கு மேது மொழிவர்கள் சிலர்வெவ் வேறே,
சித்தமற் றுலா மென்றுந் தீவினை சிதைந்தா லென்று,

மோத்தநல் யோகா லென்று முரியஞா நத்தா லென்று,
மித்திற மனைத்தா லாகா திறைதிரு வருளா லாமே.

(இ—ள்) *முத்தி - மோக்ஷம், சித்திக்கும் - சித்திப்பதற் குரிய, ஏது - ஏதுக்களை, சிலர் - சில பேர், சித்தம் - மநம், அற்றால் - நாச மடையின், ஆம் - (மோக்ஷ சித்தி) ஆம், என்றும் - எனவும், தீ வினை - பாப கர்மங்கள், சிதைந்தால் (ஆம்) - நாச முற் றால் (மோக்ஷ சித்தி) யாம், என்றும் - எனவும், ஒத்த - சமமான, நல் - நல்ல, யோகால் (ஆம்) - யோகாப்பியாசத்தினால் (மோக்ஷ சித்தி) யாம், என்றும் - எனவும், உரிய - (அடைதற்கு) உரித் தாய, ஞாநத்தால் (ஆம்) - (குரு கிருபை யின்றிய சாஸ்திர) ஞாநத்தினால் (மோக்ஷ சித்தி யாம்), என்றும் - எனவும், வெவ் வேறு - வேறு வேறு பிரகாரமாக, மொழிவர்கள் - கூறுவார்கள், இத் திறம் அனைத்தால் - இவ் வாறாகிய எல்லா உபாயங்களினா லும், ஆகாது - (மோக்ஷ சித்தி) ஆகாது,* [**குரு கிருபையினால் ஆம் எனக் கூறுகின்றார்.**] *இறை - (ஞாந) ஆசாரியரது, திரு அருளால் - மஹிமை பொருந்திய கிருபை ஒன்றினால் மாத்திரம், ஆம் - ஆத்ம சாக்ஷாத்கார வாயிலாக (மோக்ஷ சித்தி) ஆகும். (எ—று)*

(இ—பு:) *'சித்த மற்றா லாம்' என்பதி லுள்ள, 'ஆம்' என்னும் ஆக்கச் சொல், பின் னுள்ளவற்றோடும் சென்று இயைந்து பொருள் தருதலின் முத னிலைத் தீபகம். உம்மைகள் நான்கும் எண்ணுப் பொருளன. "வெவ் வேறே", "அருளா லாமே" என்புழி, ஏகாரம் இரண்டும் அசை நிலைகள். 'சிலர்' என்னும் எழுவாய், 'மொழிவர்கள்' என்னும் பயனிலை கொண்டது. 'ஏது' செயப்படு பொருள், 'ஆகாது, ஆம்' என்னும் பய னிலைகட்கு, மோக்ஷ சித்தி எழுவாய்.*

## மெய்ம் மொழி.

4. எஞ்ஞாந மந்தி ரங்கள் யோகங்க ளுபாய மெல்லா,
மெய்ஞ்ஞாந வீட்டைக் காணும் வேதநஞ் செய்ய மாட்டா,

தெஞ்ஞானக் கடைக்கண் வைத்த தேசிகன் சித்த மத்தி,
லஞ்ஞானம் பறிந்த போதே யமுதவீ டதுவுந் தோன்றும்.

(இ—ள்.) எ ஞானம் மந்திரங்கள் - எவ் வாறுய (அநாத்ம) ஞானங்களும் மந்திரங்களும், யோகங்கள் - யோகங்களும் (ஆகிய) எல்லா உபாயம் - சர்வ சாதநங்களும், மெய் - உண்மையான, ஞாந - (ஆத்ம) ஞானத்தினுல் (அடையத் தக்க), வீட்டை - மோக்ஷத்தினே, காணும் - அடையும்படியான, வேதநம் - அறிவை, செய்யமாட்டா - உண்டாக்க மாட்டா, [**ஞாநாசாரியாரது கிருபையே மோக்ஷசாதநம் எனக் கூறுகின்றார்.**] தேசிகன் - ஆசாரியர், தெண் (மை) - தெளிந்த, ஞாந - ஞானத்தோடு கூடிய, கடை கண் - கிருபா வீக்ஷண்யத்தை, வைத்த - சாத்திய, சித்த மத்தில் - (நம்) சித்தத்தில் (உள்ள), அஞ்ஞானம் - அஞ்ஞானமானது, பறிந்த - நீங்கிய, போதே - காலத்திலேயே, அமுதம் - நித்தியமா யுள்ள, வீடதுவும் - மோக்ஷமும், தோன்றும்- உண்டாம். (எ-று)

(இ—பு:) முதல் வரியில் எண் ணும்மைகள் தொக்கன. எ + ஞானம் = எஞ் ஞானம். தெண்மை + ஞானம் = தெஞ் ஞானம், இது "ஈறுபோதல் இடையுகர மிய்யாதல் ... ... ... ... ... ... ... ...பண்பிற் கியல்பே" என்ற நன் னூல் சூத்திர விதிப்படி, மை கெட்டு, ண், ஞ் ஆகத் திரிந்து, 'ஞானம்' என்பதனேடு சேர்ந்து, தெஞ் ஞானம் என்ருயிற்று.சித்தமத்தில் - என்புழி, 'சித்தம் அதில்' என்பது, அத்தில் என விரித்தல் விகாரம் பெற்றது. ஈண்டு, அது பகுதிப் பொருள் விகுதி. போதே - ஏ பிரி நிலே. வீடதுவும் - அது - பகுதிப் பொருள் விகுதி. உம் - இறந்தது தழீஇயது. உபாயம் எல்லாம் - ஈண்டு உபாயம் - பால்பகா அஃறிணைப் பெயர். எல்லாம் - என்னும் எழுவாய், 'செயமாட்டா' என்னும் பய னிலே கொண்டது. வேதநம் - செயப்படு பொருள். 'வீடு' என்னும் எழுவாய், 'தோன்றும்' என்னும் பய னிலே கொண்டது.

## மெய்ம் மொழி.

5. ஆர்த்தது பிறவி யென்று மஞ்ஞாந பாச மத்தைக், கூர்த்தமெய்ஞ் ஞாந வாளைக் கொண்டுசே திக்க வேண்டு, மேத்திமெய்ஞ் ஞாந வானை யேயவ னருட்கண் ணாலே, பார்த்தபின் னில்லாப் பெத்தம் பரிதிமுன் னிருள்போ லன்றே.

(இ-ள்) அஞ்ஞாந பாசம் - அஞ்ஞாந ரூப பந்தம், என்றும்— எப்பொழுதும், பிறவி - ஜநந (மரண) ங்களில், ஆர்த்தது -(ஜீவனை) பொருத்தி யுள்ளது, அத்தை - அந்த அஞ்ஞாந ரூப பாசத்தினை, கூர்த்த - கூர்மையான, மெய் ஞாந வாளைக் கொண்டு - தத்துவ ஞாந வாளினால், சேதிக்க வேண்டும் - அறுக்க வேண்டும், மெய் ஞாநவானையே - (அதன் பொருட்டு) யதார்த்த ஆத்ம ஞாநியினையே, ஏத்தி - (மந மொழி மெய்களால்) வழுத்தியதால், அவன் - (மகிழ்வுற்ற) அந்த ஞாநி, அருள் கண்ணால் - கிருபா வீக்ஷணத்தால், பார்த்த - ஈக்ஷித்த, பின் - பின்னர், பரிதி - சூரியனது, முன் - எதிரில், இருள் - அந்தகாரம் (இராதது), போல் - போல, பெத்தம் - பந்தமானது, நில்லா - இருக்கமாட்டாது. எ-று)

(இ-பு.) 'அது' என்னும் சுட்டுப் பெயர், ஐ உருபு ஏற்கும் போது, 'அத்தை' என விகாரப்பட்டு நின்றது. ஞாநவானையே - ஏ- பிரி நிலை. 'ஏத்த' என்னும் செய வென் னெச்சம், காரணப் பொருளில், 'ஏத்தி' எனத் திரிந்து நின்றது. கண்ணாலே - ஏ - அசை நிலை. 'நில்லாது' என்னும் அஃறிணை ஒன்றன்பால் தெரி நிலை வினை முற்று, துவ் வீறு குறைந்து, 'நில்லா' என நின்றது. பரிதி முன் னிருள் போல் - உவமை அலங்காரம். அன்று - ஏ - அசை நிலைகள். பாசம் - எழுவாய், ஆர்த்தது-பய னிலை. 'சீவன்' என்னும் செயப்படு பொருள், அவாய் நிலையால்

வருவிக்கப்பட்டது. சீடன் - தோன்ரு எழுவாய், சேதிக்க வேண்டும் - பய னிலை. அது - செயப்படு பொருள். பெத்தம் - எழுவாய். கில்லாது - பய னிலை.

## மெய்ம் மொழி.

6. விடத்தினுன் மூர்ச்சித் தானை விடம்வல்லார் பார்க்கத் தீரு, மடர்த்தல்லா ரெல்லாம் பார்த்து மதுதீரா வாறு போல, விடத்தினை யுடைய ஞாந விறைவனுற் பார்க்கி னல்லாற், சடத்துவ மாயை யாற்செய் சடக்குடைப் பிறப்ப ருதே.

(இ-ள்) விடத்தினுல் - தீய பாம்பு தீண்டிய விஷத்தினுல், மூர்ச்சித்தானை - மூர்ச்சை யுற்றிருக்கின்றவனை, விடம் - விஷத்தினை (நிவிர்த்திக்கும்படியான), வல்லார் - சாமர்த்தியம் உடைய கெருடத் தியாநிகள், பார்க்க - ரக்ஷிக்க, தீரும் - (அவ்விடம்) நிவிர்த்தியாகும், அல்லார் - (விஷத்தினை நிவிர்த்திக்கும்படியான சாமர்த்தியம் உடையர்) அல்லாதவர், எல்லாம் - யாவரும், அடர்த்து - நெருங்கி, பார்த்தும் - ஈக்ஷணம் செய்தும், அது - அந்த விஷம், தீரா - நிவிர்த்தியாகாத, ஆறு - முறைமை, போல - போல், இடத்தினை உடைய - விசாலம் பொருந்திய (அகண்ட), ஞாந - ஞாநத்தினை யுடைய, இறைவன் - ஆசாரியன், பார்க்கின் - ஈக்ஷணம் செய்யின், அல்லால் - அன்றி (ஏனையோர் பார்வையால்), சடத்துவ - சடத் தன்மையினை யுடைய, மாயையால் - மாயையினுல், செய் - செய்யப்பட்ட, சடக்கு உடை - துக்கத்தினை யுடைய, பிறப்பு - ஜநநம், அருது - நீங்காது. (எ-று)

(இ-பு) பார்த்தும் - உம் - இழிவு சிறப்பு. இறைவனுல், ஆல் - அசை நிலை. செய் சடக்கு - வினைத் தொகை. அருதே - ஏ ஈற் றசை. 'தீரும்' என்னும் பய னிலைக்குத் தோன்ரு எழுவாயாக, 'விடம்' என்பதைக் கொள்க. 'பிறப்பு' என்னும் எழுவாய்,

'அறு து' என்னும். பய னிலை கொண்டது. இதில் உவமை அணி உளது.

சோரூபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை. 7—11)

7 சுருதியு மிருதியுஞ் சொன்ன வாறுநின்,
றிருமையு மநித்தமேன் றேதும் விட்டுநற்,
குருவினை வழிபடிற் கோதி லாவவ,
னருளிடு மழிவற நின்ற வப்பொருள்.

(இ-ள்) சுருதியும் - வேதமும், மிருதியும் - ஸ்மிருதியும், சொன்ன - கூறிய, ஆறு - முறையாக, நின்று - (அநேக ஜந்மத்தில் நன்கு சித்தித்த சிரௌத ஸ்மார்த்த கர்ம தத்பரனுய்ச் சீடன்) இருந்து, இருமையும் - (இக லோக பர லோகங்கள்) இரண்டும், அநித்தம் - அநித்தியம், என்று - என உணர்ந்து, ஏதும் - (ஜகத் பதார்த்தங்களில்) எதனையும், விட்டு - (பற்றுது) விடுத்து (வைராக்கியத்தினை யடைந்து), நல் - (சிவ ஞாநத்தினுனே சம்சாரம் நாசமாம்; கர்மத்தான் நாச மாகாது என உணர்ந்து, சிவ ஞாந சித்தியின் பொருட்டுச் சுரோத்திரிய பிரஹ்ம நிஷ்டனுய) நல்ல, குருவினை - ஆசாரியரை, வழிபடில் - (பிரியத்தோடு) வழிபட்டு வரின், கோது இலா - குற்றம் அற்ற, அவன் - அந்த ஞாநாசாரியன், அழிவு அற - நாசம் இன்றி, நின்ற - இருக்கப்பட்ட, அப் பொருள் - அப் பரவித்தையை, அருளிடும் - (அந்த அபர வித்தியா விஷய சம்சார பலத்தினின்றும் விரக்தனுய சீடனுக்கு) அநுக்கிரகம் செய்வான். (எ-று)

(இ-பு) சுருதியும் - மிருதியும், உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. இருமையும் - ஏதும், உம் - இரண்டும் முற் றும்மைகள். 'அவன்' என்னும் எழுவாய், 'அருளிடும்' என்னும் பய னிலை கொண்டது. அப் பொருள் - செயப்படு பொருள்.

இது மூலத்தில் 7—வது அத்தியாயத்தில் (20–21–22) மூன்று சுலோகங்களின் பொரு ளாம்

சொரூபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை.7—39)

8. எண்ணிலாக் கல்வி யாலு மிலங்கிய கேள்வி யாலுந்,
திண்ணிதா மதியி ஞலுந் தெளியவா ராது தீர,
நண்ணிய ஞாநி தானே நயந்தருள் செய்யில் ஞாநக்,
கண்ணிஞற் காண லாகுங் கரத்திலா மலகம் போல.

(இ-ள்) எண் இலா - (இந்த ஆத்மா, படிக்கப்படும்) கணக் கற்ற, கல்வியாலும் - வேத சாஸ்திரங்களிஞலும், திண்ணிது ஆம் - கிரந்தார்த்த தாரணஞ் செய்யும் சக்தி யுடைய, மதியிஞலும் - புத்தியிஞலும், இலங்கிய - (ஞாந சாதந மாக) விளங்கிய, கேள்வியாலும் — (அநேக முறை செய்யும்) சிரவணத்திஞலும், தெளிய - அடைய, வாராது - முடியாது, தீரம் - திடம், நண்ணிய - பொருந்திய, ஞாநி - வித்துவான், நயந்து - விரும்பி, அருள் செய்யில் - (அதனை அறியும் வண்ணம்) கிருபை புரியில், ஞாநக் கண்ணிஞல் - ஞாந திருஷ்டியிஞல் (அந்தக் காரணத்திஞல்), காத்தில் - அஸ்தத்தில் (உள்ள), ஆமலகம் - நெல்லிக் கனி, போல - போல், காணல் ஆகும் - (அவ் வாத்மாவைச்) சாக்ஷாத் கரித்தல் உள தாம். (சிரவண மநந நிதித்தியாசநாதிகளால் அதன் அடைவைப் பிரார்த்திக்கும் வித்துவானுக்கு, இந்த ஆத்மா அவித்தையிஞல் மறைபட்டிருக்கப்பட்ட தனது சரீரத்தினைப் பிரகாசிக்கின்றது). (எ-று)

(இ-பு) 'எண்ணிலா' என்பது, 'எண் ணிலாத' என்பதன் ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், உம் - மூன் றும் எண்ணுப் பொருளன. ஞாநி தானே - தான் - ஏ - இரண்டும் அசை நிலைகள். 'வாராது' என்னும் பய னிலைக்குத், தோன்று எழுவாய் ஆத்மா. 'காணல்' என்னும் எழுவாய், 'ஆம்' என்னும் பய னிலை கொண்டது. இதில் உவமை அணி உளது.

இது மூலத்தில் ஏழாவது அத்தியாயத்தில் 86வது சுலோ கத்தின் பொரு ளாம்.

## ஞானாசாரம்.

9. பருவிடங் கடியுண் டானே பாவிப்பான் கருடன் றன்னைப், பெருகிய பித்தன் றானே பிழிந்துமா மருந்து கோள்வா, னிருமையு மறியா மூடர்க் கியலுமோ விறையிற் கூடல், குருபரன் கூட்டிற் கூடுங் கூட்டானேற் கூடா தென்றான்.

(இ-ள்.) பரு - பெரிய, விடம் - விஷத்தினை யுடைய (பாம்பினால்), கடி யுண்டான் - கடிக்கப்பட்டவன், கருடன்தன்னை - கருடனை, பாவிப்பானே - தியானிக்கத் தக்கவனே? (விஷம் தலைக் கேறிய புருஷன் கருடத் தியானம் செய்ய முடியாதவன் என்றபடி), பெருகிய - மிகுந்த, பித்தன் - பைத்தியக்காரன், தான் - தானே, பிழிந்து - (பச்சிலை ரசத்தினை) வடித்து (அவ் வநுபானத்தில்), மா மருந்து - பெரிய மருந்தினை (க் கலந்து), கொள்வான் ஓ - (உட்) கொள்வானே? (பைத்தியக்காரன் தானே மருந்து சாப்பிட மாட்டான் என்றபடி), இருமையும் - (அது போல இக லோக பர லோக சாதந -கிருத்தியங்கள்) இரண்டினையும், அறியா - உணராத, மூடர்க்கு - அறிவிலிகட்கு, இறையில் - பரமாத்மா வில், கூடல் - ஐக்கிய முறல், இயலுமோ - கூடுமா? (இக லோக பர லோக சாதந ஞாந மிலா அறிவிலிகள் அவ் ஐக்கிய நிலையை அடையார் என்றபடி), குருபரன் - (ஞாந) ஆசாரியனாகிய இறை, கூட்டில் - சேர்ப்பிக்கில், கூடும் - (அடைதல்) பொருந்தும், கூட்டா னேல் - (அந்த ஆசாரியர் அவ் ஐக்கிய நிலையினை) அடைவியா திருப்பாராகில், கூடாது - (அதனை அடைதல்) முடியாது, என்றான் - என (ச் சிவைக்குச் சிவன்) கூறினான். (எ-று)

(இ-பு). ஓகாரம் மூன்றும் எதிர் மறைப் பொருளன. முன் ஓகாரம் இரண்டும், பாவிப்பான், கொள்வான் என்பவற்றோடு

பிரித்துக் கூட்டப்பட்டன. கருடன் றன்னை - தன் - சாரியை. இருமையும் உம்- முற் றும்மை. கடி யுண்டான் - வினையா லணையும் பெயர். கடி யுண்டான் - எழுவாய், பாவிப்பான் - பய னிலை, கருடன் - செயப்படு பொருள். பித்தன் - எழுவாய், கொள்வானோ பய னிலை, மருந்து - செயப்படு பொருள். கூடல் - எழுவாய் இயலாது - பய னிலை. கூடல் - எழுவாய், கூடும் - பய னிலை. கூடல் - எழுவாய், கூடாது - பய னிலை. சிவன் தோன்று எழுவாய், என்றான் - பய னிலை. ஞாநாசாரியரின் கிருபை யின்றி யடைய முடியாமை - செயப்படு பொருள். இதில் உவமை அணி உளது.

## ஞாநாசாரம்.

10. கட்டுண்ட கள்வன் றானே கட்டினை விட்டுக் கோள்வான், விட்டவ்வே தனையைத் தீர்த்து விதிப்பவர் வேறே வேண்டு, மட்டமா சித்தி யோகா லறிவினா லறிய லாமோ, தட்டறப் பாசந் தீர்க்கத் தற்பரங் குருவே வேண்டும்.

(இ-ள்.) கட்டு உண்ட - (பிறரால் கயிறு முதலிய கொண்டு) கட்டப்பட்ட, கள்வன் - திருடன், தான் - தானே, கட்டினை - அக் கட்டை, விட்டுக் கொள்வானோ - அவிழ்த்துக் கொள்ளத் தக்க வனா?, விட்டு - (அக் கட்டினை அவிழ்த்து) விட்டு, அவ் வேதனையை அக் (கட்டால் உளவாம்) துன்பத்தினை, தீர்த்து - நிவிர்த்தித்து, விதிப்பவர் - (திருட்டுக்குத் தகுந்த தண்டனையை நிவிர்த்தித்துச் சுகியாய் இருப்பாயாக என்று) நியமிப்பவர், வேறு - (அத் திருட னுக்கு) அந்நிய மாக, வேண்டும் - (ஒருவர்) வேண்டும் (அது போல), அட்ட மா சித்தி - அஷ்ட மஹா சித்திகளினாலும், யோகால் - (ஹட யோகம், மந்திர யோகம், லய யோகம், ராஜ யோகம் முத லிய) யோகங்களினாலும், அறிவினால் - (அநாத்ம) ஞாநத்தினாலும், அறியல் - (பாச நிவிர்த்தியின் உபாயத்தை) உணர்தல், ஆமோ -

கூடுமா ? (சித்தி, யோக, அநாத்ம ஞாந மாத்திரத்திஞல் பாசம் நிவிர்த்தியாகாது என்றபடி), பாசம் - சம்சார பந்தத்தினை, தட்டு அற - தடை யின்றி, தீர்க்க - (தத்துவ ஞாந வாயிலாய்) நிவிர்த்திக்க, தத் பரம் - அந்த மேலான, குருவே - ஆசாரியரே, வேண்டும் - வேண்டும். (எ-று)

(இ-பு.) 'கள்வன் தாஞே'- என்பதி லுள்ள ஓகாரம், 'கொள் வாஞே' எனக், 'கொள்வன்' என்பதஞேடு பிரித்துக் கூட்டப் பட்டது. ஓ காரம் இரண்டும் எதிர் மறை. வேறே - ஏ - அசை நிலை. குருவே - ஏ - பிரி நிலை. விதிப்பவர் - வினையா லணையும் பெயர். சித்தி யோகா லறிவிஞல் - என்புழி எண் ணும்மைகள் தொக்கன. கள்வன் - எழுவாய், விட்டுக் கொள்வான் - பய னிலை, கட்டு - செயப்படு பொருள். விதிப்பவர் - எழுவாய், வேண்டும் - பய னிலை. அறியல் - எழுவாய், ஆமோ — பய னிலை. குரு - எழுவாய், வேண்டும் - பய னிலை.

## திரு மந்திரம் 9—2840

11. உருவன்றி யேநின்று ருவம்பு ணர்க்குங்,
கருவன்றி யேநின்று தான்கரு வாகு,
மருவன்றி யேநின்ற மாயப்பி ரானைக்,
குருவன்றி யாவர்க்குங் கூடலொண் ணுதே.

(இ-ள்.) உரு அன்றியே - அருவஞய், நின்று - இருந்து, உருவம் - உருவத்தினை, புணர்க்கும் - (ஈசன்) தரிப்பன், கரு அன்றி யே - (தனக்கு) ஒரு காரணம் உடைய னல்லஞய், நின்று - இருந்து, தான் கரு ஆகும் - தான் (யாவற்றிற்கும்) காரணமானவன், மரு அன்றியே - (அங்ஙனம் இருந்தும்) நிர்த்தோஷஞய், நின்ற - இருக் கின்ற, மாய - மாயைக்கு அதிஷ்டாந மாகிய, பிரானை - பரமசிவத் தினை, குரு அன்றி - குரு வருளா லன்றி (வேறு விதத்தால்), யாவர்க்கும் - எவ் வகைப்பட்டவர்களுக்கும், கூடல் - அடைதல், ஒண்ணுது - முடியாது. (எ-று.)

(இ-பு.) உரு, கரு, மறு, குரு - நான்கும் விடாத ஆகு பெய ராய், உருவினன், கருவினன், மறுவினன், குரு வருள், என்னும் அர்த்தம் தந்தன. 'மறு' என்பது, எதுகை நோக்கி மரு - என நின்றது. ஏகாரம் மூன்றும் தேற்றம். 'நின்ற' என்னும் பெய ரெச்சம், பிரான் - என்னும் பெயர் கொண்டது. ஒண்ணுதே - ஏ. ஈற் றசை. 'புணர்க்கும்' என்னும் பிற வினை, ஈண்டுத் தன் வினைப் பொருள் தந்து நின்றது. மாயா+பிரான் = மாயப் பிரான் என நிலை மொழி யீறு-, விகாரப்பட்டுப் புணர்ந்தது. 'மாயப் பிரான்' - என்பது, மாயைக்கு அதிஷ்டான மாகிய பிரான் என, நான்க னுருபும், பயனும் உடன் தொக்க தொகை. யாவர்க்கும்- உம் - முற் றும்மை. 'ஈசன்' என்னும் தோன்றா எழுவாய், 'புணர்க்கும்', 'ஆகும்' என்னும் பய னிலைகள் கொண்டது. 'கூடல்' என்னும் எழுவாய், 'ஒண்ணாது' என்னும் பய னிலை கொண்டது.

## மோக்ஷ சாதநத்தினைக் கூறல்.

## போத ரத்நாகரம்.

12. தேசிகன் பதநற் சேவையின் வலியுந் திகழ்பதத் தளவிலா வன்பு, மாசினன் முத்தி யதில்விருப் பதுவு மமலவா ரணத்தினில் விருப்பு, நாசமா மிந்த வுடலினில் வெறுப்பு நசையற விடயத்தி லுவர்ப்பு, மீசனேப் பொருளு மேன்னுநற் றுணிவு மிவையேழின் முத்திசா தநமே.

(இ-ள்.) தேசிகன் - ஆசாரியரது, பதம் - திரு அடி (க்குச் செய்யும்), நல் - நல்ல, சேவையின் - சிசுருஷையினது, வலியும்- சாமர்த்தியமும், திகழ் - விளங்காநின்ற, பதத்து - (ஆசாரியரது) திரு அடியில், அளவு இலா - எல்லை யின்றிய, அன்பும் - பக்தியும், ஆசு இல் - குற்றம் அற்ற, நல் - உயர்ந்த, முத்தியதில் - மோக்ஷத் தில், விருப்பதுவும் - விருப்பமும், அமல - நின்மலமான, ஆரணத்

*தினில் - வேதத்தில், விருப்பும் - விருப்பமும், நாசம் ஆம் - நசிக் கும்படியான, இந்த உடலினில் - இந்தச் சரீரத்தில், வெறுப்பும் - வெறுப்பும், விடயத்தில் - விஷயங்களிடத்தில், நசை அற - விருப்பம் நீங்கும்படியாக, உவர்ப்பும் - அருவருப்பும், எப் பொரு ளும் - எவ் வகைப்பட்ட வஸ்துக்களும், ஈசன் - ஈசுவர ஸ்வரூபமாம், என்னும் - என்கின்ற, நல் - நல்ல, துணிவும் - நிச்சயமும், இவை - (ஆகிய ஏழு வித மாய) இவைகள், எழில் - சிறப்பினை யுடைய முத்தி - மோக்ஷத்திற்கு, சாதநமே - சாதநமாம். (எ-று)*

*(இ-பு.) சேவையின் வலி - ஆறும் வேற்றுமைத் தொகை. இன் - சாரியை. உம் - எட்டில், எப் பொருளும், என்பதி லுள்ள உம் - முற் றும்மை. ஏனைய ஏழும் எண்ணுப் பொருளன. பதத்து - அத்து - சாரியை. முத்தியதில் - விருப்பதுவும்—அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். ஆரணத்தினில் - அத்து - இன் - இரண்டும் சாரியைகள். உடலினில் - இன் சாரியை. சாதநமே ஏ - ஈற் றசை. 'இவை' என்னும் எழுவாய், 'சாதநம்' என்னும் பெயர்ப் பய னிலை கொண்டது.*

## போதாமிர்தம்.

**13. திகழுநற் குரவன் திருவுளம் பார்த்துச் செய்யுமே வற்சிறப் பதுவு, மகிழுநற் குரவன் மருவுநற் பதியே மன்னிநீங் காதவா தனையும், புகழுநற் றமரும் போன் முதற் பொருளும் பொருந்துநோ யெனமதித் திடலுங், தகவுடைச் சமைவுஞ் சாந்தியு முத்தி சாதந மென்பர்தக் கோரே.**

*(இ-ள்.) திகழும் - ('ஈசுர ரூபமாக') விளங்காநின்ற, நல் - மேன்மை யுடைய, குரவன் - ஆசாரியரது, திரு உளம் - சீரிய கருத் தினை, பார்த்து - உணர்ந்து, செய்யும் - இயற்றுகின்ற, ஏவல் -*

ஏவ லாதி பண்ணிவிடையின், சிறப்பதுவும் - பெருமையும், மகிழும் - சந்தோஷிக்கும், நல் - நல்ல, குரவன் - ஆசாரியர், மருவும் - பொருந்தி யிருக்கின்ற, நல் - சிறந்த, பதி - ஊரை, மன்னி - (அடைந்து) நிலைத் திருந்து, நீங்காத - (விட்டுப்) போகாத, வாதனையும - சமஸ்காரமும், புகழும் - (பிறர்) துதிக்காநின்ற, நல் - மிகுதியான, தமரும் - சுற்றமும், பொன் முதல் - ஸ்வர்ணாதி, பொருளும் - வஸ்துக்களும், பொருந்து - சம்பந்தியாநின்ற, நோய் - துன்ப (ஏதுவா)ம், என - என்று, மதித்திடலும் - கருதுதலும், தகவுஉடை - தகுதியான, சமைவும் - பொறுமையும், சாந்தியும் - (சித்த) அமைதியும் (ஆகிய இவ் வைந்தினையும்), தக்கோர் - பெரியோர், முத்தி - மோக்ஷத்திற்கு (ஞாந வாயிலாக), சாதநம் - சாதநமாம், என்பர் - என்று கூறுவர். (எ-று)

(இ-பு.) உம் - ஏழும் எண்ணுப் பொருளன. சிறப்பதுவும் - அது பகுதிப் பொருள் விகுதி. பதியே - ஏ - அசை நிலை. நோய்க்கு ஏதுவானவற்றை, நோய் என உபசரித்துக் கூறினார். தக்கோரே ஏ - ஈற் றசை. தக்கோர் - எழுவாய், என்பர் - பய னிலை. மேற் கூறிய சிறப்பதுவும், முதலிய ஐந்தும் செயப்படு பொருள்.

## போதாமிர்தம்.

14. முடிகவித் துலகா டிருவிகழ்ந் திறைவன் மோய் கழல் சூடுநற் றிருவும், படிதனக் கேவல் செய்பத மிகழ்ந்து பரமனுக் கேவல்செய் பதமு, மடையுநற் சுவைக ளனைத்தையு மிகழ்ந்திங் கமலனற் சேடமா ருதலு, மிடையறத் திகழு முத்திசா தநமென் றிசைத்திடு மேலை யிலா ரணமே.

(இ-ள்.) முடி - (நவ ரத்ந கசிதமான) கிரீடத்தினை, கவித்து - தாரணை செய்து (தரித்துக்) கொண்டு, உலகு , (ஐம் பத் தாறு

கோடி பூ மண்டலத்தினையும், ஆள் - ஆக்ஞி செய்யும்படியான, திரு - ஐசுவரியங்கள் அனைத்தையும், இகழ்ந்து - (நசுவரம் என) நிந்தித்து (விட்டு); இறைவன் - பரமேசுவரனது, மொய் - (வனப்பு) நெருங்கிய, கழல் - (வீர கண்டை அணிந்த திரு) அடி (த் தாமரை) யினை, சூடும் - (சிரசில்) தரித்துக்கொள்ளும்படியான, நல் - மேம் பட்ட, திருவும் - ஐசுவரியப் பிராப்தியும், படி தனக்கு - பூலோகத் தில் உள்ள மநிதர்கட்கு, ஏவல் - அடிமைத் தொழில், செய் - செய்கின்ற, பதம் - பதவியினை, இகழ்ந்து - (துச்சம் என) நிந்தித்து (விட்டு), பரமனுக்கு - பரமேசுவரனுக்கு, ஏவல் - ஏவ லாதி பணி விடைகளை, செய் - செய்கின்ற, பதமும் - பதவியும், அடையும் - (கரும்ாதீநமாக வந்து) பொருந்துகின்ற, நல் - மிகுந்த, சுவைகள் - ஷட் ரச முடைய பதார்த்தங்கள், அனைத்தையும் - யாவற்றையும், இகழ்ந்து - (தோஷ முடைய வென உணர்ந்து) நிந்தித்து (விட்டு), இங்கு - இவ் விடத்து, அமலன் - நின்மலனான ஆசாரியரது, நல் - பெருமை மிக்க, சேடம் - உச்சிஷ்டத்தினை, ஆருதலும் - அருந்து தலும் (ஆகிய இம் மூன்றினையும்), இடை அற - சதா காலமும், திகழும் - விளங்காநின்ற, முத்தி - மோக்ஷத்திற்கு, சாதநம் - சாதநமாம், என்று - என, எலை இல் - (பெருமையில்) அள வற்ற, ஆரணம் - வேதம், இசைத்திடும் - கூறுகிற்கும். (எ-று)

(இ-பு.) உம் நான்கில், அனைத்தையும் - என்புழி உள்ள உம் - முற் றும்மை. ஏனைய மூன் றும்மைகளும் எண்ணுப் பொரு ளன. படி தனக்கு - தன் - அ - சாரியைகள். படி - ஈண்டு இட வாகு பெயராய், இடத்தி லுள்ளோரை உணர்த்திற்று. எல்லை என்பது, எலை - என இடைக் குறைந்து நின்றது. ஆரணமே - ஏ - ஈற் றசை. 'திகழும்' என்னும் பெய ரெச்சம், 'சாதநம்' என்னும் பெயர் கொண்டது. ஆரணம் — எழுவாய், இசைத்திடும் - பய னிலை. திருவும் - என்பது முதலிய மூன்றும் செயப்படு பொருள் அம் மூன் றன்கண்ணும் இரண்ட னுருபு தொக்கு நின்றது.

மூல சித்தி.

15. துரிசினற் பாரம் பரியமா முறையிற் றுகளற வழுவிலாத் துணிவும், பரிவுறக் குரவன் பாதமே நோக்கிப் பழுதறப் புகழுபண் பதுவு, மரியநற் குரவ னருளறம் பொருளோ டின்பம்வீ டென்னுமாண் மையதுங், தெரிவுறத் திகழு முத்திசா தநமாய்ச் செப்புவர் தெய்வஞா நிகளே.

(இ-ள்.) துரிசு இல் - குற்றம் அற்ற, நல் - நல்ல, பாரம் பரியம் ஆம் - (குரு) பரம்பரையில் வந்ததாகிய, முறையில் - (முத்தி சாதநக்) கிரமத்தில், துகள் அற - (சந்தேக விபரீதாதி) குற்றம் அற (உண்டாம்), வழுவு இலா - நழுவுத லில்லாத (திடமான), துணிவும் - நம்பிக்கையும், பரிவு உற - அன்பு பொருந்த, குரவன் - ஆசாரியரது, பாதமே - திரு அடிகளையே, நோக்கி - ஸ்மரித்து, பழுது அற - (முக ஸ்துதி யாதி) குற்றம் நீங்கும்படியாக, புகழு - துதிக்கின்ற, பண்பதுவும் - தன்மையும், அரிய - (கிடைத்தற்கு) அருமையான, நல் - உத்தம மான, குரவன் - ஆசாரியரது, அருள் - காருண்யமே, அறம் - தர்மம், பொருள் - அர்த்தம், இன்பம் - காமம், வீடு - மோக்ஷம் (ஆகிய நான்கு மாம்), என்னும் - எனக் கருதும், ஆண்மையதும் - திறனும் (ஆகிய மூன்றினையும்), திகழும் - விளங்காநின்ற, முத்தி - மோக்ஷத்திற்கு, சாதநம் ஆய் - (ஞாந வாயிலாய்ச்) சாதந மாக, தெரிவு உற - (அதிகாரிகள் யாவரும்) அறிந்து கொள்ளும்படி, தெய்வ - தேவத் தன்மையினை உடைய, ஞாநிகள் - பெரியோர்கள், செப்புவர் - கூறுவார்கள். (எ-று)

(இ-பு.) துக ளற 'அற' என்னும் வினை யெச்சம் அவாய் நிலையால், 'பெற்ற உண்டாம்' என்னும் பெய ரெச்சங் கொண்டது. அப் பெய ரெச்சம், 'துணிவு' என்னும் பெயர் கொண்டது. வழு, 'வழுவுதல்' என்பதன், தல் - விகுதியும், உகரச் சாரியையும், குறைந்த முத னிலைத் தொழிற் பெயர். உம் - மூன்றும் எண்ணுப் பொருளன. அந்த உம்மைகளுக்கு முன்னே இரண்ட

னுருபு தொக்கு நின்றது. பாதமே - ஏ - பிரி நிலை. பண்பதுவும்- அது - பகுதிப் பொருள் விகுதி. பொருளோடு - ஓடு - எண்ணுப் பொருளது. அந்த ஓடு இடை நிலைத் தீபக மாய், 'அருள்' முதலிய வினைப் பெயர்களோடும் சென் றியையும். ஆண்மையதும் - அது - பகுதிப் பொருள் விகுதி. ஞானிகளே - ஏ. ஈற் றசை. ஞானி கள் - எழுவாய், செப்புவர் - பய னிலை. துணிவும் - என்பது முதலிய மூன்றும் செயப்படு பொருள்.

## சொருபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை 12—16)

16. நேச நெஞ்சினுற் றனக்கது நினைவல வாயினு நெறியென்றே, தேசி கன்றிரு வுள்ளமே செய்குவான் செநித்திடுங் குலத்துக்கு, மாச தாகினு மாச்சிர மத்திலே வழுவினு முலகெல்லா, மேசி வீடினு மறம்புகழ் தநம்பிற விழப்பினு மிடரேனும்.

(இ-ள்.) தனக்கு - (நன் மாணாக்கனானவன்) தனக்கு, அது - ஆசாரியர் கூறியது, நினைவு அல ஆயினும் - தன் கருத்திற்கு ஏற்ற தன் றாயினும், செநித்திடும் - (தான்) பிறந்திருக்கும், குலத்துக்கு - ஜாதிக்கு, மாசது ஆகினும் - (அதனால்) குற்றம் உண்டாயினும், ஆச்சிரமத்திலே - (தனது) ஆசிரமத்தில், வழுவினும் - நழுவ நேரி னும், உலகு எல்லாம் - லோகத்தார் எல்லாரும், ஏசி வீடினும் - நிந்தித்து(த் தன்னை நீக்கி) விடினும், அறம் - தர்மமும், புகழ் - கீர்த்தியும், தநம் - தநமும் (ஆகிய இவற்றோடு), பிற- (இன்னும்) ஏனையவற்றையும், இழப்பினும் - இழந்து விடினும், இடரேனும் - (பிற) துன்பங்கள் (சுகங்கள்) வரினும் (அவற்றினைக் கவனியாது),- நெறி - (அதுவே) நன் மார்க்கம், என்று - எனக் கருதி, நேச - (குருவின் இஷ்டத்தினைச் செய்பவன் மேலான மோக்ஷத்தினை அடைகின்றான் என உணர்ந்து) விருப்பத்தோடு கூடிய, நெஞ்சி னால் - மனத்தினால், தேசிகன் - ஆசாரியரது, திரு உள்ளமே - திருக் கருத்தின்படியே, செய்குவான் - செய்து முடிப்பான். (எ-று)

(இ-பு.) நினைவு - என்பதன் ஈற்றில், நான்கனுருபு தொக்கது. அல - ஒருமையிற் பன்மை மயக்கம். உம் - எழும் இழிவு சிறப்பு. என்றே - ஏ - தேற்றம். உள்ளமே - ஏ - பிரி நிலை. செய்குவான் - கு - சாரியை. செகித்திடும் - இறப்பில் எதிர்வு வந்தமை கால வழு வமைதி. இடு - பகுதிப் பொருள் விகுதி. மாசது - அது - பகுதிப் பொருள் விகுதி. ஆச்சிரமத்திலே - அத்து சாரியை - ஏ - அசை நிலை. அறம், புகழ், தகம், பிற- என்புழி எண் ணும்மை கள் தொக்கன. மாணுக்கன் - தோன்று எழுவாய், செய்குவான் - பய னிலை. உள்ளம் - செயப்படு பொருள். 'விடினும்' வீடினும் என, நீண்டது.

இது மூலத்தில், 12வது அத்தியாயத்தில், 30-31-32-33 வது நான்கு சுலோக அர்த்தமும், இச் செய்யுளில் அடங்கி யிருக்கிறது.

### போத ரத்நாகரம்

17. என்ற னக்கிது வாய்த்தவா றறிகிலே னேம்பிரான் கழற்கேவ, றன்ற னக்குநா ளுரிது தகுவதோ தமியனேற் கேன்றேன்று, சேன்று றப்பேரு மார்வமு மச்சமுஞ் சேறிதர வடிமைக்க, ணின்றி யற்றுவ தேவலி னியல்பேன நிகழ்மறை சோலுமைந்தா.

(இ-ன்.) மைந்தா - குழந்தாய் !, எம் - என் னுடைய, பிசான்- (தலைவ ராகிய) ஆசாரியரது, கழற்கு - திரு அடிகளுக்கு, ஏவல் தன் தனக்கு - (செய்யும் ஏவ லாதி) பணிவிடைகளுக்கு, நான் - யான், ஆர் — யார்?, தமியனேற்கு - (தகுதி யற்ற) எளியேனுக்கு, இது - இக் (குரு) கைங்கர்யம், தகுவதோ - தகுதியாமோ?, என் தனக்கு - அடியேனுக்கு, இது - இக் (குரு) பணிவிடை, வாய்த்த - கிடைத்த, ஆறு - வழி, அறிகிலேன் - (என்ன பாக்கியத்தாலோ?) உணர்ந்தி லேன், என்று என்று - எனக்கருதி, உற - (வணக்கம்) பொருந்த,

சென்று - போய், பெரும் - மிகுந்த, அச்சமும் ஆர்வமும் - பயமும் பக்தியும், செறித்தர - பொருந்தும்படி, அடிமைக்கண் - அடிமைத் தானத்தில், நின்று - இருந்து, இயற்றுவது - 'அவர் எண்ணப்படி' செய்வது, ஏவலின் - ஏவ லாதி பணிவிடையின், இயல்பு — தன்மை, என - என்று, நிகழ் - விளங்காநின்ற, மறை - வேதம், சொலும் - கூறும். (எ-று.)

(இ-பு.) என் றனக்கு - தன் - அ - இரண்டும் சாரியைகள். எம் பிரான் - எம் - ஒருமையிற் பன்மை மயக்கம். ஏவல் தன் றனக்கு - தன் - தன் அ - மூன்றும் சாரியைகள். ஆர் - யார் என்னும் வினா வினைக் குறிப்பின் திரிபு, அது தன்மை யிடத்து வந்தமை புதியன புகுதல். தகுவதோ - ஓ - எதிர் மறை. ஏவல் - இது ஆத்த மாதி வினைப் பணிகளுக்கு உபலக்கணம். ஆர்வமும், அச்சமும், உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. இயற்றுவது தொழிற் பெயர். நான் - தோன்றா எழுவாய், அறிகிலேன் - பய னிலை. ஆறு - செயப்படு பொருள். நான் - எழுவாய், ஆர் - பய னிலை. மறை - எழுவாய், சொலும் - பய னிலை, இயற்றுவது - செயப்படு பொருள்.

18. நிறம்பெற நீரா டாமுன்னீ ராட னின்றிட விருத்தல்தான் கிடத்த, லுறங்குமுன் னுறங்க லுண்ணுமுன் னுண்ட லுரையென வுரையாம லுரைத்த, லறம்பழி யெவர்க்குங் கூறுத லருளா ததுசெய்த லருளிய பணியை, மறந்தன னென்றல் குருவலாற் றெய்வ மதித்தல்செய் பவன்மக னல்லன்.

(இ-ள்.) நிறம் - தூய்மை யாதி குணம், பெற - பொருந்த, நீர் - (நதி யாதி) ஜலத்தில், ஆடா முன் - (குரு) ஸ்நாநம் செய்வ தற்கு முன்னர், நீர் - (தான் அந் நதி யாதி) ஜலத்தில்), ஆடல் - ஸ்நாநம் செய்தலும், நின்றிட - (ஆசாரியர்) நிற்க, தான் - தான், இருத்தல் - உட்கார்ந்திருத்தலும், கிடத்தல் - படுத்துக்கொள்ளு

தலும், உறங்கு முன் - (குரு) நித்திரை செய்வதற்கு முன்னர், உறங்கல் - (தான்) நித்திரை செய்தலும், உண்ணு முன் - (குரு) போஜநம் செய்வதற்கு முன்னர், உண்டல்-'தான்' போஜநம் செய்த லும், உரை என - சொல் என்று, உரையாமல் - (குரு) சொல்லா திருக்க, உரைத்தல் - (தான்) சொல்லுதலும். அறம் - (குருவின் பேரில்) வசை கவியினையும் (அறம் பாடல்), பழி - நிந்தையினையும், எவர்க்கும் - (உலகத்தி லுள்ள) யார்க்கும், கூறுதல் - சொல்லுத லும், அருளாதது - (குரு) ஆக்ஞாபிக்காதவற்றை, செய்தல் - செய்த லும், அருளிய - 'குரு' ஆக்ஞாபித்த, பணியை - கைங்கர்யங்களை, மறந்தனன் - மறந்துவிட்டேன், என்றல் - எனக் கூறுதலும், குரு அலால் - குருவே அல்லாமல், தெய்வம் - கடவுள், மதித்தல் -வேறு உண் டெனக் கருதுதலும், செய்பவன் - (ஆகிய இப் பத்தினை யும்) இயற்றுபவன், மகன் - (நன்) மாணக்கன், அல்லன் - ஆகான்.

(இ-பு.) நீ ராடல் ஆதி தொழிற் பெயர்கள் பத்தின் இறுதி யிலும் எண் ணும்மைகள் தொக்கன. அருளாதது - வினையா லணை யும் பெயர். செய்பவன் - வினையா லணையும் பெயர். செய்பவன் - எழுவாய், அல்லன் - பய னிலை.

## போதாமிர்தம்

19. அருளறமங் கறைந்திடுத லறமலா துரைத்த லறைபொழுதி லிடையுரைத்த லகங்கரித்தங் குரைத்தல், பொருளறிவு தானுரைத்தல் பொருளல்லா துரைத்தல் புன்கோட்டி கொண்டுரைத்தல் பொடிவனவங் குரைத்தல், லிருளுறுமச் செவிசொல்ல லேவலிசைத் திடுத லிடமறியா திறையருளிச் செயவுரைத்தல் வினவல், தெருளுறுநற் குருகீர்த்தி யல்லதுபா டிடுதல் தேசிகன்றன் சந்நிதியிற் றீரவிடு மிவையே.

(இ-ள்.) அங்கு - குரு சந்நிதியில் (அவர் உத்தரவின்றி) அருள் - (ஜீவ) காருண்யத்தினையும், அறம் - தர்மத்தினையும், அறைந்திடுதல் - கூறுதலும், அறம் அலாத - தர்மம் அல்லாதவற்றை, உரைத்தல் - கூறுதலும், அறை பொழுதில் - (குரு) உபதேசிக்கும் காலத்தில், இடை - மத்தியில், உரைத்தல் - கூறுதலும், அகங்கரித்து - (தன்னைப் பெரியவனாகக் கருதிக்) கொர்வித்து, உரைத்தல் - கூறுதலும், பொருள் அறிவு - அர்த்த ஞானத்தினை, உரைத்தல் - (குருவுக்கு) கூறுதலும், பொருள் அல்லாத - அர்த்தம் உடையன வல்லாத வாக்கியங்களை, உரைத்தல் - (குரு சந்நிதியில்) கூறுதலும், புன் - இழிவான, கோட்டி கொண்டு - பரிகாசங் கொண்டு, உரைத்தல் - கூறுதலும், பொடிவன - நிலைநில்லாத வார்த்தைகளை, உரைத்தல் - கூறுதலும், இருள் உறும் - மயக்கம் பொருந்திய (வார்த்தைகளை), அச்செவி - குரு காதில், சொல்லல் - கூறுதலும், ஏவல் - (குருவினைக்) கைங்கர்யம் செய்யும்படி, இசைத்திடுதல் - கூறுதலும், இடம் - (தக்க சமய) இடங்களை, அறியாது - தெரியாது, இறை - குருவை, அருளிச் செய - அநுக்கிரகம் செய்யும்படி, உரைத்தல் - கூறுதலும், வினவல், (சந்தேகத்தைக்) கேட்டலும், தெருள் உரு - ஞானத்தினை யுடைய, நல் - உத்தம, குரு - ஆசாரியரது, கீர்த்தி - புகழ், அல்லது - அல்லாததை, பாடிடுதல் - கீர்த்தித்தலும் இவை - (ஆகிய) இப் பதின் மூன்றையும், தேசிகன் - ஆசாரியரது, சந்நிதியில் - சந்நிதானத்தில், தீர - அத்தியந்தம், விடும் - (சற்சீடன்) விட்டொழிப்பான். (எ-று)

(இ-பு-) 'அறம் அல்லாத+உரைத்தல்—' என நிற்கவேண்டியது, இடைக் குறைந்த 'அலாத' என்னும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினையா லணையும் பெயரின் ஈற்று அகரம் குன்றிந்து, 'அல்லா துரைத்தல்' - என நின்றது. 'பொருள லா துரைத்தல் என்புழியும், மேற் குறித்த வாறே கொள்க, அறிவு தான் - தான் அசை நிலை. 'அகங்கரித் தங்கு' 'பொடிவன வங்கு' என்புழி, அங்கு - இரண்டும் அசை நிலைகள். 'இருளுறு மச்செவி' என்புழி, "இருளுறும் வார்த்தைகள் அச்செவி" - என, வார்த்தை

கன் என்னும் சொல், இடையில் சொல் லெச்சத்தால் வருவிக்கப் பட்டது. செவி சொல்லல் - ஏழாம் வேற்றுமைத் தொகை. இசைத்திடுதல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. 'அல்லது பாடிடு தல்' என்புழி, 'அல்லது' என்பது குறிப்பு வினையா லணையும் பெயர். தேசிகன் றன் - தன் - சாரியை, இவையே - ஏ - ஈற் றசை. சற் சீடன் - தோன்ற எழுவாய். விடும் - பய னிலை, இவை - செயப் படு பொருள்.

## போதாமிர்த

20. வெஞ்சோலுங் கடுஞ்சோலும் விரைந்த சோல்லதும்
வஞ்சமும் பழுதுடன் மாறு கூறலும்,
பஞ்சிடு முலகியல் பயனில் வாசகந்,
தஞ்சநா யகன்றன்முன் தவிர வேண்டுமால்.

(இ-ள்) வெம் - கோப மான, சொலும் - வார்த்தையும், கடும் - கடுமை யான, சொலும் - வார்த்தையும், விரைந்த - விரை வான, சொல்லதும் - வார்த்தையும், வஞ்சமும் - வஞ்சக வார்த்தையும், பழுது - குற்ற வார்த்தையும், மாறு - விரோத வார்த்தையும், கூற லும் - (ஆகிய இந்த ஆறினைச்) சொல்லுதலும், பஞ்சிடும் - துன்பத் தை யுண்டுபண்ணும், உலகு - இவ் வுலகத்தின், இயல் (வாசகம்) தன்மையினை (க் குறித்த வார்த்தையும்), பயன் இல் - பிரயோஜநம் இன்றிய, வாசகம் (கூறலும்) - சொல்லும் (ஆகிய இந்த இரண்டி னைச் சொல்லுதலும்), தஞ்சம் - சரணாகதி யாக உள்ள, நாயகன் - ஆசாரியரது, முன் - சந்நிதியில், தவிர வேண்டும் - (அத்தியந்தம் செய்யாதிருக்கும்படி நன் மாணாக்கன்) நீக்கிக் கொள்ளவேண்டும். ()

(இ-பு.) உம் - ஐந்தும் எண்ணுப் பொருளன. சொல்லதும் - அது - பகுதிப் பொருள் விகுதி, வஞ்சம் - பழுது - மாறு - என்னும் பண்புப் பெயர்கள், அப் பண்பை உணர்த்தும் சொற்களை ஆகு பெயரால் உணர்த்தின. பஞ்சி - இடும் - என நிற்க வேண்டிய விடத்து, பஞ்சி - என்பதன் ஈற்று இகரம் குறைந்து, பஞ்சிடும்

என நின்றது. பஞ்சி ≈ வருத்தம், அல்லது, துன்பம். வாசகம் - என்பதனை, உலகியல் - என்பதனோடும் ஒட்டிப் பொருள் கொள்க. கூறலும் - என்பதனை, வாசகம் - என்பதனோடும் இணைக்க. நாயகன் றன் - தன் - சாரியை. உடன் - ஆல் - அசை நிலைகள். நன் மாணுக்கன் - தோன்று எழுவாய், தவிர வேண்டும் - பய னிலை. கூறல் - செயப்படு பொருள்-

## போத சித்தி

21. ஆதநஞ் சயநம் வாகந மிதியடி யத்திரங்
குடையோடா பரண, மீதுவண் டயிலங் குளியோடு
பூச்சந் தநமுதன் மேவியங் கிடுத, லோதுபல் லுருஞ்ச
லோண்பதம் விளக்க லுரைத்தவெற் றிலைதின லிவைதா,
மாதிநற் குரவ னரியசந் நிதியி லடியவ ரறவிடுந் தொழிலே.

(இ-ள்.) நல் - நல்ல, குரவன் - ஆசாரியரது, அரிய - அருமை யான, சந்நிதியில் - சந்நிதாநத்தில், அடியவர் - மாணுக்கர், அற - அத்தியந்தம், விடும் - விடத் தக்க, தொழில் - செயல்கள், ஆதநம் - ஆசந (த் திருத்தலு)ம், சயநம் - படுக்கை (யிற் படுத்தலும்) வாகநம் - ஊர்தி (ஊர்தலும்), மிதி அடி - பாத ரக்ஷை (இடுதலும்), அத்திரம் - பாணம (தாங்குதலும்), குடை - (குடை பிடித்தலும்)) ஆபரணம் - பணி (அணிதலும்), மீது - (சரீரத்தின்) மீது, வண் - வளமை யான, தயிலம் - தைலம் (தேய்த்து), குளி - குளித்தலும், மேவி - விரும்பி (ஆடம்பர மாக), பூ - புஷ்பம், சந்தநம் - சந்தநம், முதல் - முதலியன, இடுதல் - அணிதலும், ஓது - சொல்லாநின்ற, பல் - பல்லை, உருஞ்சல் - உருஞ்சுதலும், ஒண்(மை) - ஒள்ளிய, பதம் - காலை, விளக்கல் - கழுவுதலும், உரைத்த - (அடியவர்க் காகா தென ஆன்றோர்) கூறிய, வெற்றிலை - தாம்பூலத்தினை, தினல் ஆதி - அருந்தலு முதலிய, இவை - இவை (பதின் மூன்று) களாம்.

(எ-று)

(இ-பு.) ஆதநய் முதலியவற்றின் உபயோகத்திற்கு ஏற்ற வெவ் வேறு தொழில்கள், இடுதல் என்பதனை, உப லக்கணமாகக் கொண்டு வருவிக்கப்பட்டன. ஒடு - இரண்டும் எண் ணிடைச் சொற் கள். 'முதல' என்னும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெய ரீற்று அகரம் குறைந்து, 'முதல்' என நின்றது 'மேவி யங்கு' - 'இவை தாம்' - என்புழி, அங்கு - தாம் - இரண்டும். அசை நிலைகள். தொழிலே - ஏ - ஈற் றசை. ஆதி என்பதனை, தின லாதி யிவை - என அந்வயித்துக் கொள்க. தொழில் - எழுவாய், இவை - பய னிலை.

## மெய்ந் நெறி விளக்கம்

22. இறைவன்முன் பசிங்கித மாகவந் திடுத லிட்டவே டத்திஞே டணைதல், கறைபுறுஞ் சாயை யிறைவன்மேற் படுதல் கடவுளி னிழறன்மேற் படுத, லுறைதரு தலத்தின் மேலிருந் திடுத லுளமுக முகுளமா யிருத்த, லறைதரு மமல னரியசந் நிதியி லடியவ ரறவிடுந் தொழிலே.

(இ-ள்.) அறை தரும் - (ஈசுர சொரூபமாக வேதம்) கோஷிக் கின்ற, அமலன் - நின்மல (ஆசாரிய)ரது, அரிய - (கிடைத்தற்கு) அருமையான, சந்நிதியில் - சந்நிதாநத்தில், அடியவர் - மாணக்கர், அற - அத்தியந்தம், விடும் - விடத் தக்க, தொழில் - செயல்கள், இறைவன் - ஆசாரியரது, முன்பு - சந்நிதியில், அசிங்கிதம் ஆசு - சுத்தம் இன்றி, வந்திடுதல் - அணுகுதலும், இட்ட - (வெளிச் செல் வத்) தரித்த, வேடத்திஞேடு - (குல்லாய், சட்டையாதி) வேஷத் தோடு, அணைதல் - கூடுதலும், கறை - குற்றம், உறும் - பொருந்தி யிருக்கின்ற, சாயை - (தனது) நிழல், இறைவன் - ஆசாரியர், மேல் - மீது, படுதல் - பொருந்தும்படி செய்தலும், கடவுளின் - ஆசாரியரது, நிழல் - சாயை, தன் - (மாணக்கனுகிய) தனது, மேல் - (சரீரத்தின்) மேல், படுதல் - பொருந்தும்படி செய்தலும்,

உறை தரு - (ஆசாரியர்) இருக்கின்ற, தலத்தின் மேல் - இடத்தி னின்றும் மேலான் இடத்தில், இருந்திடுதல் - இருத்தலும், உளம் - மந மாகிய, முகம் - இடம், முகுளம் ஆய் இருத்தல் - (ஆசாரியரின் வாக்கைக் கிரகிக்கக் கூடாத வாறு அநாத்ம விஷயத்தில்) குவிந்து, அல்லது, கூம்பி யிருத்தலும ஆகிய (இவை ஆறு மாம்.)

(இ-பு.) வந்திடுதல் - இருந்திடுதல் - இடு இரண்டும் பகுதிப் பொருள் விகுதி. படுதல் - என்னும் தன் வினை இரண்டினையும், படுத்தல், எனப் பிறவினை யாக்கிக் கொள்க. உறை தரு -அறை தரு - தரு - இரண்டும் துணை வினைகள். உள முகம் - பண்புத் தொகை. தொழிலே - ஏ - ஈற் றசை. தொழில் - எழுவாய். (அவாய் நிலையால்) பெற்ற ஆம், பய னிலை.

## ஞாந சித்தி

23. போற்றுகை தவிர்த நாதன் பொருளினைப் புசித்த லீதல், தூற்றுத ரோடந் தன்னைச் சொன்னவை மறுத்தல் பொய்கள், சாற்றுதல் குலமுங் கல்வி தநத்தபி மாநம் பண்ணன், மாற்றுதல் கொடுத்த றன்னை மற்றிவை குருவோ டாகா.

(இ-ள்.) போற்றுகை - (ஆசாரியரைத்) தோத்தரித்தலை, தவிர்தல் - செய்யாதிருத்தலும், நாதன் - ஆசாரியரது, பொருளினை- -திரவியத்தினை, புசித்தல் - அநுபவித்தலும், ஈதல் - (அதனைத்) தாநம் கொடுத்தலும், தோடம் தன்னை - (ஆசாரியரது) தோஷத்தினை, தூற்றுதல் - (பலர் அறியச்) சொல்லுதலும், சொன்னவை - (குரு) ஆஞ்ஞைகளை, மறுத்தல் - மறுதலித்தலும், பொய்கள் (குருவினிடத்தில்) பொய் வார்த்தைகளை, சாற்றுதல் - சொல்லுதலும், குலமும் -(மாணுக்கன்) குலத்திலும், கல்வி - வித்தையிலும், தநத்து- திரவியத்திலும், அபிமாநம் - (தான் குருவினும் மேலானவன் என்னும்) அபிமாநம், பண்ணல் - செய்தலும், கொடுத்தல் தன்னை -

(குருவிற்குப் பிற சீட ராதியோர் கொடுக்க வேண்டியன) கொடுத்தலை, மாற்றுதல் - தவிர்த்தலும் (ஆகிய), இவை - இவ் வெட்டு வித விவகாரங்களும், குருவோடு - ஆசாரியரோடு, ஆகா - (மாணாக்கன் வைத்துக் கொள்ளத் தக்கவை.) அல்ல.

(இ-பு.) பொருளினை - இன் - சாரியை. தோடந் தன்னை - கொடுத்தல் தன்னை, தன் - இரண்டும் சாரியைகள். குலமும் - உம் - எண் ணிடைச் சொல், அதனைக், கல்வி - தநம் - என்பவற்றோடும் இயைத்துக் கொள்க. தநத்து - அத்து - சாரியை. மற்று - அசை நிலை. இவை - எழுவாய், ஆகா - பய னிலை.

## தத்துவ சரிதை

24. நீரிடத் தினுநிசி யிருளி டத்தினு நெறிகணிற் பயமுறு மிடத்துஞ் சீரருட் குரவன் முன்புசே விப்பான் றிகழ்ந்தமற் றுளநெறி யவற்றிற், பேரருட் குரவன் பின்புசே விப்பான் பிறிதொரு சிந்தையற் றிறைவ, ஞர்திருக் கழலிற் சாயைபோன் முன்பின் ஞய்விடா ரன்பினுத் தமரே.

(இ-ள்.) நீரிடத்திலும் - ஜல முள்ள விடத்திலும், நிசி இருள் இடத்திலும் - அத்தியந்தம் இருள் அடர்ந்த இடத்திலும், நெறிகணில் - மார்க்கங்களில், பயம் - பீதி, உறு மிடத்தும் - அடையும் படியான விடத்தும், சீர் - சிறப்பினை, உடைய, அருள் - ஞாந, குரவன் - ஆசாரியருக்கு முன்பு - முன்னர், சேவிப்பான் - (மாணாக்கன் சென்று) ஊழியஞ் செய்வான், திகழ்ந்த - (முற் கூறப்பட்டனவாய்) விளங்காநின்ற, அவற்றின் - அம்மார்க்கங்களினும், மற்று - அந்நிய மாக, உள - உள்ள, நெறி - மார்க்கங்களில், பேர் - மிகுந்த, அருள் - அருளினை யுடைய, குரவன் - ஆசாரியருக்கு, பின்பு - பின்னர், சேவிப்பான் - (மாணாக்கன் சென்று) ஊழியஞ் செய்வான், பிறிது - (இங்ஙனம்) வேறு, ஒரு சிந்தை - ஒரு எண்ண

மும், அற்று - இன்றி, இறைவனுர் - ஆசாரியரின், திரு - அழகிய, கழலில் - திரு அடிகளில், சாயை - (தமது தேகத்தின்) நிழல், போல் - போல, முன் - (சில விடத்து) முன்னும், பின் ஆய் - (சில விடத்து) பின்னும் ஆகி (இருந்து சேவித்து), உத்தமர் - உயர்வுடைய மாணுக்கர்கள், அன்பின் - பக்தியினுல், விடார் - (தம் குருவினை) விட்டு நீங்கார். (எ - று)

(இ-பு.) உம் - மூன்றும் எண்ணுப் பொருளன. மற்று, பிரிது-என்னும் பொருளது. அவற்றின் - இன் - ஐந்த னுருபு. அது ஈண்டு, "மண் ணுலகின் வேறு விண் ணுலகம்" என்றாற் போல வேற்றுமைக் கெதிர்ப் பொருளில் வந்தது. அன்பின் - இன் - சாரியை. ஏ - ஈற்றசை. உத்தமர் - எழுவாய், விடார் - பய னிலை, குரு - செயப்படு பொருள்.

## மூல சித்தி

25. தன்னு ளத்தெழு தீங்குத ஞயகன்,
முன்னு ரைத்தினி மேன்முளை யாவகை,
சொன்ன வப்பரி சேசுட வேண்டலா,
லன்ன வப்பதி விட்டகல் வானலன்.

(இ-ள்.) தன் - (நன் மாணுக்கன்) தனது, உளத்து - மனத்தின்கண், எழு - உண்டாகின்ற, தீங்கு - குற்றங்களை, தன் - தன்னுடைய, நாயகன் - ஆசாரியரது, முன் - சந்நிதியில், உரைத்து - கூறி, இனிமேல் - இன்னும், முளையா வகை - (தீங்குகள்) உண்டாகாதபடி, சொன்ன - (குரு) உபதேசித்த, அப் பரிசே, அந்தக் கிரமமாகவே, சுடவேண்டலால் - (அத் தீங்கின் பீஜத்தைத்) தகித்தல் செய்ய வேண்டி யிருத்தலினுல், அன்ன - அத்தகைய ஆசாரியர் இருக்கும்படியான, அப் பதி - அவ் வூரை, விட்டு - விட்டு, அகல்வான் - நீங்குபவன், அலன் - ஆகான். (ஆசாரியர் வசிக்கும் ஊரை விட்டு நீங்காது தேகச் சாயை போல் மாணுக்கன் இருக்க வேண்டும் என்றபடி.)

(இ-பு.) உளத்து - அத்து - சாரியை. பரிசே - ஏ - பிரி நிலை. அல்லன் - என்பது, 'அலன்' என இடைக் குறைந்து நின்றது. நன் மாணாக்கன் - தோன்றா எழுவாய், அகல்வா னலன் - பய னிலை பதி - செயப்படு பொருள்.

## சமயாசாரம்.

26. தநமாக் காய முயிர்மூன்றுந் தலைவற் கீந்தங் கிவைகெடினு, மநவாக் காய கன்மத்தால் வணக்கங் கெடாத மநத்தராய், நினைவாக் காய மட்டாங்க நேர்பஞ் சாங்க சிட்டாங்க, மெனநால் வணக்கஞ் சிராங்கமுட னிறையாற் பிறவி யறுவோர்க்கே.

இ-ள்.) தலைவர்க்கு - குருவுக்கு, தநம் - 'தம்' பொருள் (சம்பத்து), மா காயம் - தூல சரீரம், உயிர் - பிராணன், மூன்றும் - (ஆகிய) மூன்றினையும், ஈந்து - தத்தம் செய்து, இவை - இம் மூன்றும், கெடினும் - நாசம் உறினும், மநம் - மநமும், (வாக்கு) - வாக்கும், காயம் - சரீரமும் (ஆய முக் கரணங்களின்), கன்மத்தால் - கிரியைகளினால் ஆய, வணக்கம் - வழிபாடு, கெடாத - நீங்காத, மநத்தர் ஆய் - சிந்தை யுடையவர்களாய், நினைவா - (குருவின்) நினைவு (தியாநம்) உடையவர்களாய், காயம் - சரீரத்தால் செய்கின்ற, அட்ட அங்கம் - அஷ்டாங்கமும், நேர் - ஒழுங்கான, பஞ்ச அங்கம் - பஞ்சாங்கமும், சிட்ட அங்கம் - திரி யங்கமும், சிர அங்கம் - சிராங்கமும், என - என்று, நால் - நான்கு விதமான, வணக்கம் - வழிபாடு, இறையால் - குருவினால், பிறவி - ஜநந (மரண ரூப சம்சார)த்தினை, அறுவோர்க்கு - நீங்கப் பெறுவோராகிய நன் மாணாக்கர்க்கு (உள வாம்.

(இ-பு.) மூன்றும் - உம் - முற்றும்மை. ஈந் தங்கு - அங்கு - அசை நிலை. கெடினும் - உம் - எதிர்மறைப் பொருளது. மந வாக் காய கன்மத்தால் - என்புழி, மநம், வாக்கு, காயம் என்பன ஈறு

குறைந்து நின்றன. மநத்தர் - குறிப்பு வினையா லணையும் பெயர், அத்து - சாரியை. நினைவா - நினைவு + ஆ - ஈண்டு, 'ஆ' என்பது, 'ஆக' என்னும் வினை யெச்சத்தின் ஈறு குறைந்த விகாரச் சொல். அது அவாய் நிலையால் பெற்ற, 'செய்கின்ற' என்னும் பெய ரெச்சங் கொண்டது. ஏ - ஈற் றசை. வணக்கம் - எழுவாய், அவாய் நிலை யால் பெற்ற உளவாம் - பய னிலை. உடன் அசை.

தலை, இரு கரம், இரு கன்னம், முகவாய், இரு புயம் ஆகிய இவை அஷ்ட அங்க மாம். தலை, இரு கரம், இரு முழந் தாள் ஆகிய இவை பஞ்ச அங்க மாம். தலை, இரு கரம் ஆகிய இவை திரி அங்க மாம். தலை சிர அங்க மாம். என நான்கு வித நமஸ்காரத்தினை உணர்க. இதற்கு உதாரணம் - சிவ தருமோத்திரம்,

"வலஞ்செய்து தண்டதனை மானவிதி முறைதழுவத்
தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்
துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி
ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து விலங்குறவே."

என மற்றும் வருவனவற்றுற் காண்க.

## மூல சித்தி.

27. சென்றபோ திறைவன் றிருவடித் தலத்தே சிறந்தபஞ் சாங்கவட் டாங்க, மோன்றவே வணங்கி யோப்பிலா னருளை யுள்மது நிறையவே பருகிப், பின்னரப் பரிசே விடைகோளும் பொழுதும் வணங்குக பெரியவன் முகப்பே, நின்றுநேக் குருகித் தன்றன்வா யாரத் துதிப்பது நீதியன் பருக்கே.

(இ-ள்.) சென்ற - மாணுக்கன் (தன் குரு சந்நிதியில்) கிட்டிய, போது - காலத்து, இறைவன் - ஆசாரியரின், திரு அடி தலத்து - அழகிய பாதங்க ளிடத்து, சிறந்த - (வெளி வழிபாட்டிற்கு இன்றி

யமையாத) சிறப்பினை உடைய, பஞ்ச அங்கம் - ஐந்து அவயவங் களும், அட்ட அங்கம் - எட்டு அவயவங்களும், ஒன்ற - (பூமியில்) பொருந்தும்படி, வணங்கி - வழிபட்டு (பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ் காரங்களைச் செய்து என்றபடி), ஒப்பு இலான் - (உவமித்தற்கு) உவமை (உலகத்தில் எதுவும்) இல்லாத ஆசாரியரது, அருளை - அநுக்கிரகத்தினை, உளம் - மநத்தின்கண், நிறைய - பூரண மாக, பருகி - உட் கொண்டு (பெற்று என்றபடி), பின்னர் - பின்பு, விடை - விட்டுப் போதற் குரிய ஆக்ஞையினை, கொளும் - (குருவி னிட மிருந்து பெற்றுக்) கொள்ளுகிற, பொழுதும் - சமயத்திலும், அப் பரிசே - முன் செய்த பிரகாரமே, வணங்குக - (அஷ்டாங்க பஞ்சாங்க) நமஸ்காரங்களைச் செய்க, அன்பருக்கு - பக்தி யுடைய மாணுக்கர்கட்கு, பெரியவன் - குருவினது, முகப்பு - சந்நிதியில், நின்று - (வணக்கத்துடன்) நின்று, நெக்கு - (மநம்) நெகிழ்ச்சி யடையும்படியாக, உருகி - உருக்கம் உற்று, தன் - தமது. வாய் ஆர- வாய் நிறைய, துதிப்பது - தோத்திரம் செய்வது, நீதி - முறைமை யாம்.

(இ-பு.) பரிசே - ஏ - தேற்றம், ஏனைய ஏகாரம் ஐந்தும் அசை நிலைகள். உளமது - அது - பகுதிப் பொருள் விகுதி. பொழு தும் - உம் - இறந்ததுதழீஇய எச்சம். தன் றன் - தன் - சாரியை 'தம்' என நிற்க வேண்டுழித், 'தன்' - என நின்றமை, பன்மை யில் ஒருமை மயக்கம். துதிப்பது - எழுவாய். நீதி - பய னிலை.

## மெய்ந் நெறி விளக்கம்.

28. குரவனுர் தீர்த்து மொழிவன வெல்லாங் குருதர மாகவோ திடுக, தெரியுமா றரிய ஞாநகோ சத்தைத் தெரிந் திடி னெடுத்தவிழ்த் திறைமு, னரியவா தநத்தில் வைத் திறை யருட்டாள் வணங்கியங் கதன்பயன் கேட்டாங், குரியகோ சத்தைக் கட்டிநா யகன்ற ளொப்பற வணக்குத லொழுக்கே.

(இ-ள்.) குரவனார் - ஆசாரியர், தீர்த்து - (சந்தேக விபரீதங்களை) நீக்கி, மொழிவன - உபதேசிக்கத் தக்கன, எல்லாம் - யாவையும், குருதரம் ஆக - குருவினிடமாகவே, ஓதிடுக - படிக்குக, தெரிந்திடின் - (அவ் வோதும் முறையை விசாரித்துப்) பார்க்குமிடத்து, தெரியும் - (சீடன் பொருள்) விளங்கும், ஆறு - விதம், அரிய - (அறிதற்கு) அருமையான, ஞான கோசத்தை - ஞான சாஸ்திரத்தினை, எடுத்து - எடுத்து, அவிழ்த்து - (கட்டு) அவிழ்த்து, இறை - குருவின், முன் - முன்னர், அரிய - மேன்மை யான, ஆதனத்தில் - பீடத்தில், வைத்து - வைத்து, இறை - ஆசாரியரின், அருள் - கிருபையினை யுடைய, தாள் - திரு வடிகளை, வணங்கி -(அஷ்டாங்க) நமஸ்காரம் செய்து, அதன் - அந் நூலினது, பயன் - அர்த்தத்தினை, கேட்டு - (ஏகாக்கிரத்துடன்).சிரவணம் செய்து, உரிய - (தான் கட்டுதற்கு) உரித்தா யுள்ள, கோசத்தை - (அச்) சாஸ்திரத்தினை, கட்டி - கட்டி (வைத்துக் கொண்டு), நாயகன் - ஆசாரியரின், தாள் - திரு வடிகளில், ஒப்பு அற - சமானம் அற (சிறப்பாக), வணங்குதல் - (மீண்டும்) நமஸ்கரித்தல், ஒழுக்கு - முறையாம். (எ-று)

(இ-பு) மொழிவன - தெரி நிலை வினையா லணையும் பெயர், அங்கு - ஆங்கு - அசை நிலைகள். ஏ - ஈற் றசை. மாணுக்கன் - தோன்ரு எழுவாய், ஓதிடுக - பய னிலை. வணங்குதல் - எழுவாய், ஒழுக்கு - பய னிலை.

## தத்துவ போதம்.

29. எப்படிக் கீழா மவர்களே யெனினு மிறையுளத் தடைத்தவர் தம்மை, யப்பரம் பரம னென்றுளத் துணர்க வயன்முதன் மூவரே யெனினு, மெய்ப்பட விறைவன் றிருவுள மிலதேன மீண்டுபோ ராதுகை விடுக, செப்பிட விறைவன றிருவரு ணிறைந்த சீடரா சாரநன் கிதுவே.

(இ-ள்.) எப்படி - எவ் வித, கீழாமவர்களே - தாழ்வாகியவர் களே, எனினும் - ஆயினும், இறை - ஆசாரியர், உளத்து - (தம்) மநத்தின்கண், அடைத்தவர் தம்மை - விருப்பத்தோடு கருதியவர் களை, அப் பரம் பரமன் - அந்த மேலான பரமேசுவரன், என்று - என, உளத்து - மநத்தின்கண், உணர்க - (சீடர் அறியக் கடவர், இறைவன் - ஆசாரியரது, திரு உளம் - திவ்விய கருத்து (விருப்பம்) மெய்ப்பட - உண்மை யாக, இலதேல் - இல்லாதிருக்குமாயின், அயன் - பிரஹ்ம தேவன், முதல் - முதலிய, மூவரே - மும் மூர்த்தி களே, எனினும் - ஆயினும் (அவர்களை அவர்கள்) மீண்டு - திரும்பி, பாராது - நோக்காது, கை விடுக-(அத்தியந்தம் விட்டு) விடக் கடவர், செப்பிட - (யாவரும் வியந்து) கூறும்படியாக, இறைவன் - குருவி னது, திரு அருள் - மேன்மையான அநுக்கிரகம், நன்கு நிறைந்த - பரிபூரணமாக உள்ள, சீடர் - (சற்) சிஷ்யர்களின், ஆசாரம் - ஆசாரம், இது - இவை யாம். (எ-று)

(இ-பு) அவர்களே - மூவரே. ஏ - இரண்டும் தேற்றம். 'அவர்களே எனினும்', உம் - இழிவு சிறப்பு, அடைத்தவர் தம்மை தம் - சாரியை, 'மூவரே எனினும்' - உம் - உயர்வு சிறப்பு. செப்பிட, என்னும் வினை எச்சம், 'நிறைந்த' என்னும் பெய ரெச்சங் கொண் டது. 'இவையே' - என நிற்க வேண்டிய விடத்து, 'இதுவே' என நின்றமை, பன்மையில் ஒருமை மயக்கம். ஏ - ஈற் றசை. நன் மாணாக்கன் - தோன்றா எழுவாய், உணர்க - பய னிலை. நன் மாணாக் கன் - தோன்றா எழுவாய், விடுக - பய னிலை. சீடாசாரம் - எழுவாய், இது(வே) - பய னிலை.

## சிவப் பிரகாச தரிசநம்.

30. இப்பரி இறைவன் றிருவுளம் பிழையா திலங்கிய வேவலின் வலியா, லெப்பரி சுள்ள சித்திகள் வலிக ளிசைந்திடா நிற்குமங் கவர்யா, லப்பரி செல்லாச் சித்தியும்

வந்தா லகந்தையூம் வியப்புமே வாமே, தப்பற வேமையா
டம்பிரா னேவற் றன்மையேன் றருளினைப் பணிவாம்.

(இ-ள்.) இப் பரிசு - இவ் வாறு, இலங்கிய - (ஈசுவர சொரூபமாக) விளங்கிய, இறைவன் - ஆசாரியரது, திரு உளம் - திருக் கருத்திற்கு பிழையாது - மாறுபாடின்றிச் (செய் துள்ள), ஏவலின் - (சதுர் வித) பணிவிடைகளின், வலியால் - சாமர்த்தியத்தினால், எப் பரிசு உள்ள- எவ் வாறாய, சித்திகள் - (அஷ்ட) சித்திகளும், வலிகள் - (சாபாநுக் ரக) சாமர்த்தியங்களும், அவர்பால் - (முற் காலத் துள்ள) அந்தப் பத்ம பாதாதி மாணாக்கரிடத்தில், இசைந்திடாநிற்கும் - பொருந்தி யிருந்தனவோ, அப் பரிசு - அவ் விதம், எல்லாச் சித்தியும் - சர்வ சித்திகளும் (வலிகளும்), வந்தால் - (குரு பணிவிடையினால் நமக்குக்) கிடைக்கு மாயின், அகந்தையும் - (அதனால் நமக்குச் சித்திகள் உண்டாயின என்று கருதி) கர்வத்தினையும், வியப்பும் - தற் புகழ்ச்சியும், மேவாமே - பொருந்தாமல் (அவை), எமை - அடி யேமை, தப்பு அற - குற்றம் நீங்க, ஆள் - ஆட்கொண்ட, தம்பி ரான் - குரு மூர்த்தியின், ஏவல் - பணிவிடைகளின் (பய னாய), தன்மை - தர்ம மாம், என்று - எனக் கருதி, அருளினை - (குரு) கிருபையினை (க் குறித்து), பணிவாம் - நமஸ்கரிப்பாம். (எ-று.

(இ-பு.) செய்திடாநிற்கும் - 'செய்யா' என் வாய்பாட்டு எதிர் கால உடன்பாட்டுத் தெரிநிலை வினை முற்று - இதில், இடு - பகுதிப் பொருள் விகுதி. ஆ - சாரியை. 'செய்திடாநின்றது' என நிற்க வேண்டிய விடத்து, 'நிற்கும்' - என எதிர் காலம் வந் தமை - கால வழு வமைதி. நிற்கும் - என்னும் வினை முற்றை நிற் குமோ? என வினை எச்ச மாக்கி, 'நின்றதோ' எனப் பொருள் கொள்க. அங்கு - அசை நிலை. சித்தியும் - உம் - முற் றும்மை- அகந்தையும் வியப்பும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. 'பிழையாது' - என்னும் எதிர் மறைக் குறிப்பு வினை யெச்சம் அவாய் நிலையால் பெற்ற, "செய்துள்ள" என்னும், பெய ரெச்சங்

கொண்டது. ஏவலின் - இன் - சாரியை, நாம் தோன்றா எழுவாய், பணிவாம் - பய னிலை. அருள் - செயப்படு பொருள்.

### சமயாசாரம்.

31. பெருந்தவ மில்லான் றன்னைப் பேணிய மடந்தை யுள்ளத், திருந்தவை முடிந்த வென்றா லிகபரந் தெரிந்த ஞாநப், பெருந்தவக் குருவைத் தெய்வ மென்றுமெய் பேண வல்லார்க், கரும்பொரு ளியாது மில்லை யிருமையு மகலி டத்தே.

(இ-ள்.) பெரும் - மிகுந்த, தவம் - தவப் பயன், இல்லான் தன்னை - (ஒன்றும், இல்லாத தன் புருஷனை, பேணிய - (தெய்வம் என) விரும்பி வழிபட்ட, மடந்தை - (ஒரு கற்புடைய) ஸ்திரீக்கு, உள்ளத்து - (தனது) மநத்தின்கண், இருந்தவை - இருந்த இச்சைகள் யாவும், முடிந்த - முற்றுப் பெற்றன, என்றால் - எனத் தர்ம சாஸ்திரம் கூறு மாகில், இகம் - இஹ லோக இயல்புகளையும், பரம் - பர லோக இயல்புகளையும், தெரிந்த - (நன்கு) உணர்ந்த, ஞாந - ஞாநத்தோடு கூடிய, பெரும் - மிகுந்த, தவம் - தவத்தினை யுடைய, குருவை - ஆசாரியரை, தெய்வம் - (பிரத்தியக்ஷமாக எழுந் தருளி வந்த) ஈசுவரனும், என்று - எனக் கருதி, மெய் - உண்மை யாக, பேண - விரும்பி வழிபட, வல்லார்க்கு - சாமர்த்தியம் உடைய மாணக்கர்கட்கு, அகல் - விரிந்த, இருமை இடத்தும் - இக லோக பர லோக மாகிய இரண்டிடத்தும், அரும் - (அடையக் கூடாத) அரிய, பொருள் - பதார்த்தங்கள், யாதும் - ஒன்றும், இல்லை - இல்லையாம் (எல்லாப் பொருளும் அடையப்படும் என்றபடி.)

(இ-பு) இல்லான் றன்னை - தன் - சாரியை, இருந்தவை - வினையா லணையும் பெயர். இக பரம் - உம்மைத் தொகை. வல்லார் - குறிப்பு வினையா லணையும் பெயர். பொருள்+யாது - பொரு

ளியாது - இ - சாரியை. யாதும், இருமையும் - உம் இரண்டும் முற்றும்மைகள். ஏ - ஈற்றசை. யாதும் - எழுவாய், இல்லை - பயனில்லை. இதில் கைமுதிக நியாய முண்டு.

## ஞாந சாரம்.

32. சாற்றிய பரிசிற் றவறுத லேவன் மறுத்தலாம் பிழையது சாற்றி, ஞற்றவங் கதனைத் தீர்த்திடற் குபாய மாய்ந்திடத் தோன்றிஞ லில்லைச், சேற்றினைச் சேற்ருற் கழுவலா யிடுமோ தெளிந்தநீர் கொண்டலா லதுபோ, லாற்றிய விறைவ னருடரு நீரா லப்பிழைச் சேறுநீக் கிடுவான்.

(இ-ள்) சாற்றிய - (குரு) முற் புகன்ற, பரிசில் - தன்மையில், தவறுதல் - (செய்யாது வேறு) தவருன விதத்திற் செய்தலும், ஏவல் - (குரு) பணியினை, மறுத்தல் ஆம் - (செய்யேன் என்று) மறுத்தலு மாகிய, பிழையது - குற்றம் பற்றி, சாற்றின் - சொல்லுமிடத்து, அதனை - அக் குற்றத்தினை, தீர்த்திடற்கு - (சீடன்) நிவிர்த்திப்பதற் குரிய, உபாயம் - சாதநங்கள், ஆற்ற ஆய்ந்திடத்து - மிகுதியாக ஆராய்ந்த விடத்தில், ஒன்றிஞல் - ஒரு விதத்திஞலும், இல்லை - இலவாம், தெளிந்த - தெளிவான, நீர் - ஜலத்தினை, கொண்டு - கொண்டு, அல்லால்-(கழுவ லாமே) அன்றி, சேற்றினை - சேற்றை, சேற்ருல் - சேற்றிஞல், கழுவல் ஆயிடுமோ - கழுவுதல் கூடுமோ? (கூடாது என்றபடி), அது போல் - அதைப் போல, ஆற்றிய - (ஞாந உபதேசம்) செய்த, இறைவன் - ஆசாரியர், தரும் - அநுக்கிரகிக்கும், அருள் நீரால் - கிருபா ஜலத்திஞல் (மாத்திரம்) அப் பிழை - (ஆசாரியருக்குச் செய்த) அக் குற்ற மாகிய, சேறு - சேற்றினை, நீக்கிடுவான் - (அந்த மாணுக்கன்) நிவிர்த்தித்துக் கொள்ளுவான், (வேறு விதத்திஞல் முடியாது என்றபடி.)

(இ பு.) பிழையது - அது - பகுதிப் பொருள் விகுதி. பிழையது - அதனை - என்பன ஜாதி யொருமை. அங்கதனை - அங்கு - அசை நிலை. அன் சாரியை. ஆய்ந்த + இடத்து = 'ஆய்ந்திடத்து' என, 'ஆய்ந்த' என்னும் பெய ரெச்சம், அகர ஈறு குறைந்து நின்று புணர்ந்தது. ஆயிடுமோ- இடு - பகுதிப் பொருள் விகுதி- ஓ - எதிர் மறை. நீக்கிடுவான் - இடு - பகுதிப் பொருள் விகுதி. உபாயம் - எழுவாய், இல்லை - பய னிலை. எழுவல் - கழுவாய், ஆயிடுமோ - பய னிலை. மாணுக்கன் - தோன்ரு எழுவாய், நீக்கிடுவான் - பய னிலை. பிழைச் சேறு - செயப்படு பொருள். அருள் நீர் - பிழைச் சேறு - என்பன பண்புத் தொகை. அருளை - நீராகவும், பிழையைச் சேருகவும் கூறல் - உருவகம். இச் செய்யுளில் உவமை யணி யுளது.

## ஞாந சாரம்.

33. வேற்றுள குற்ற மியாவையுந் தீர்க்கும் விமலமா மிறையரு ளென்ரு, லாற்றவங் குற்ற பிழையைநீக் குவது மவனரு ளன்றிவே றுண்டோ, போற்றியங் கவன்றன் பொன்னடி பொருந்திப் புநிதபா தோதக மாடி, யாற்றவங் கமல னருளினை முழுக்கி லக்கணந் தீருமப் பிழையே.

(இ-ள்.) விமலம் ஆம் - நின்மலமாகிய, இறை - ஆசாரியரது, அருள் - கிருபையானது, வேற்று - ஆசாரியருக்குச் செய்த குற்றத்தினும்) வேருக, உள - உள்ள, குற்றம் - குற்றங்கள், யாவையும் - முழுமையும், தீர்க்கும் - நிவிர்த்தி செய்யும், என்ருல் - எனக் கூறப் படு மாயின், அங்கு - குருபால் (செய்ததாக), ஆற்ற உற்ற - மிகுதி யாகப் பொருந்திய, பிழையை - குற்றத்தினை, நீக்குவதும் - நிவிர்த்திப்பதும், அவன் - அந்த ஞாநாசாரியரது, அருள் - கிருபையினை, அன்றி - அல்லாது, வேறு - வேறு (சாதநம்), உண்டோ - இருக்கின்றதோ? (இல்லை என்றபடி), போற்றி - ஆசாரியரை மந வாக்குக் காயங்களினுல் சீடன்) துதித்து, அவன் - அவரது, பொன் - பொன்

(போன்ற), அடி - திரு அடியினை, பொருந்தி - அடைந்து, புனித - பரிசுத்தமான, பாத உதகம் - பாத ஜலங் கொண்டு, ஆடி - ஸ்நாநம் செய்து, அமலன் - நின்மல ஆசாரியரது, அருளினை - கிருபையின் கண், ஆற்ற - மிகுதியாக, முழுக்கில் - (தன்னை) மூழ்கச் செய்யின், அக் கணம் - அந்த க்ஷணத்திலேயே, அப் பிழை - அந்தக் குற்றம், தீரும் - நிவிர்த்தி யாகும். (எ-று)

(இ-பு.) யாவையும் - உம் - முற் றும்மை- அங்கு - மூன்றும், அசை நிலை. நீக்குவதும் - உம் இறந்தது தழீஇயது. நீக்குவது - வினையா லணையும் பெயர். உண்டோ - ஓ எதிர் மறை. அவன் றன் - தன் - சாரியை. பாத+உதகம் - பாதோதகம் - குண சந்தி. வட மொழிப் புணர்ச்சி. ஏ - ஈற் றசை. நீக்குவது - எழுவாய், உண்டோ பய னிலை. பிழை - எழுவாய், தீரும் - பய னிலை.

## போத சாரம்.

34. அறைந்தவப் பரிசப் பிழையினை நீக்கா தவனெரி நிரயம்வீழ்ந் தழியும், பிறந்திடிற் பிரம வரக்கனும் பெரும் பாம் பாமெனப் பெருமறை பேசுஞ், சிறந்தன பிழைதீர் வளவுமங் கவன்றன் றெரிசநம் பரிசநந் தகுமோ, மறந்துமற் றணுகார் மாதவத் தடியாக ரணுகில்வன் பாதக மன்றே.

(இ-ள்.) அறைந்த - முற் புகன்ற, அப் பரிசு - அவ் வாறே, அப் பிழையினை - அக் குற்றத்தினை, நீக்காதவன் - நிவிர்த்திசெய்து கொள்ளாத மாணுக்கன், எரி - கொழுந்துவிட் டெரிகின்ற அக்கினி மயமான, நிரயம் - (ரௌரவ) நரகத்தில், வீழ்ந்து - விழுந்து, அழியும் - நாசத்தினை அடைவன், பிறந்திடில் - (அவன் அதினின் றும் ஒருவாறு மீண்டு) ஜந்மம் எடுக்க நேரில், பிரம அரக்கன் ஆம் - பிரஹ்ம ராக்ஷச னுகவும், பெரும் பாம்பு ஆம் - மலைப் பாம்பாகவும் பிறப்பன்:, என - என்று, பெரும் - மகத்தான, மறை - வேதம், பேசும் - கூறும், சிறந்தன - (பாபங்களுள் தலை) சிறந்தனவான,

*பிழை - அக் குற்றங்கள், தீர்வு - நிவிர்த்தியாகும், அளவும் - பரியந்த மும், அவன் - அந்த மாணுக்கனே, தெரிசநம் - (கண்ணுல்) பார்த்த லும், பரிசம் - (கையால்) தொடுதலும், தகுமோ - கூடுமோ? (கூடா என்றபடி), மா தவத்து - பெரிய தவத்தினை யுடைய, அடியார் - சாதுக்கள், மறந்தும் - மறந்தும் கூட, அணுகார் - (அந்தக் குருத் துரோகி யாகிய மாணுக்கனைக்) கிட்டார், அணுகில் - கிட்டில், வன் - வலிய, பாதகம் - பாபம் உள தாம்.* (எ-று)

(இ-பு.) *நீக்காதவன் - சிறந்தன - இரண்டும் வினையா லணை யும் பெயர்கள். தீர் வளவும் - உம் - முற் றும்மை. அங்கு - அசை நிலை. அவன் றன் - தன் - சாரியை. தகுமோ - ஓ எதிர் மறை. மறந் தும் - உம் - இழிவு சிறப்பு. மற்று - அசை நிலை. அன்றே - அன்று- ஏ - இரண்டும் அசை நிலைகள். நீக்காதவன் - எழுவாய், அழியும் - பய னிலை. பெரு மறை - எழுவாய், பேசும் - பய னிலை. நீக்காத வன் செய்தி - செயப்படு பொருள். (அவாய் நிலையாற் கொள்ளப் பட்டது.) தெரிசநம், பரிசம் - எழுவாய், தகுமோ - பய னிலை. அடியார் - எழுவாய், அணுகார் பய னிலை. 'அவனை' என்னும் செயப்படு பொருள் அவாய் நிலையால் வருவித்துக் கொள்க. பாத கம் - எழுவாய், ஆம் - என்னும் பய னிலையை அவாய் நிலையால் வருவித்துக் கொள்க.*

## சொரூபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை–12–17)

**35. தேசி கன்றிரு வுள்ளமுண் டாகவச் சிவன்றிகழ்ந் திடுகின்று, னீச னிங்கருள் செய்யவந் திருக்கிற விடமிவன் றிருமேனி, மாச தோன்றிவ னளவிலே சேயிலேரி வாய்நர கினிற்பூத, நாச மேவ்வள வவ்வள வுஞ்சேல நண்ணுநன் னெறிநண்ணுன்.**

(இ-ள்) *தேசிகன் - குரு, திரு உள்ளம் உண்டாக - பிரீதி அடைய, அச் சிவன் - அந்தச் சிவன், திகழ்ந்திடுகின்றுன் - பிரசந்நன்*

ஆகின்றனன், இவன் - இக் குருவினது, திரு மேனி - தேகம், ஈசன் - அம் மஹாதேவன், இங்கு - இவ் வுலகத்தின்கண், அருள் - அநுக்கிரகம், செய்ய - புரிதற்கு, வந்திருக்கிற - (எழுந்தருளி) வந்திருக்கிற, இடம் - ஸ்தாநம் ஆம், இவன் அளவில் - இக் குருவுக்கு மட்டில், ஒன்று - ஒரு, மாசது - குற்றம், செயில் - செய்யில், எரி வாய் - அக்கிநி வாய்ந்த, நரகினில் - நரகத்தில், பூதம் - பூதங்களின், நாசம் - அழிவு, எவ் வளவு - எதுவரையோ, அவ் வளவும் - அது வரையும், செல - கழியும்படி, நண்ணும் - பொருந்தி யிருப்பன், நல் நெறி - நல்ல மோக்ஷ மார்க்கத்தினை, நண்ணன் - பொருந்தான்.

(இ-பு.) திகழ்ந்திடு - இடு - பகுதிப் பொருள் விகுதி. மாசது - அது - பகுதிப் பொருள் விகுதி. அளவிலே - ஏ - அசை நிலை. அவ் வளவும் - உம் - முற்றும்மை. சிவன் - எழுவாய். திகழ்ந்திடுகின்றான் - பய னிலை. இடம் - எழுவாய். திரு மேனி - பய னிலை. மாசு செய்த மாணவன் - தோன்றா எழுவாய், நண்ணன் பய னிலை. நன் னெறி - செயப்படு பொருள்.

இது பிரஹ்ம கீதை சம்ஸ்கிருதத்தில், 12-வது அத்தியாயம் 34+35வது சுலோகங்களின் பொருள் ஆம்.

## சிவாநந்த நிலையம்.

36. குரவ னேகுறி யேதுமி லாச்சிவ,
உரிய சத்தியே யோப்பிலா வம்பிகை,
கருது மைந்தரே கந்தர்வி நாயகர்,
பெருகு சுற்றமும் பேணுமப் பத்தரே.

(இ-ள்) குரவனே - ஆசாரியனே, குறி ஏதும் - (காள கண்ட திரி நேத்திராதி) எவ் வித அடையாளமும், இலா - (வெளிப்படையாக) இன்றிய, சிவன் - (பரம) சிவன் ஆவன், உரிய - (குருவுக்கு) உரித்தா யுள்ள, சத்தியே - மனைவியே, ஒப்பு இலா - (மாயா வல்லபத்தில்) சமாநம் இன்றிய, அம்பிகை - அம்பிகை யாகும், கருதும் -

சன்மார்க்கராக) எண்ணத் தகுந்த, மைந்தரே - (அவர்) புத்திரர்களே, கந்தர் - ஷண்முகக் கடவுளும், விநாயகர் - விக்நேசுவரக் கடவுளும் ஆவர், பெருகு - மிகுந்த, சுற்றமும் - (அவர்) சுற்றத்தார்களே, பேணும் - (யாவராலும்) விரும்பத் தகுந்த, அப் பத்தர் - பரமேசுவரன்து பத்தர்கள் ( ஆகிய அச் சிவ கணங்கள்) ஆவார்கள் (எ-று.)

(இ-பு.) குரவனே, சத்தியே, மைந்தரே, ஏ - மூன்றும் தேற்றம். சுற்றமும் - உம் - இறந்தது தழீஇயது. ஏ - ஈற்றசை. குரவன் - எழுவாய், சிவன் - பய னிலே. சத்தி - எழுவாய். அம்பிகை - பய னிலே. மைந்தர் - எழுவாய், கந்தர், விநாயகர் - பய னிலே. சுற்றம் - எழுவாய். பத்தர் - பய னிலே.

## மெய்ம் மொழி.

37. சற்குரு பரசி வன்ற ஞயினும் வாசி சாற்றிற்,
சற்குரு சிவன்கோ பித்தாற் சமிப்பிக்குஞ் சிவஞ லென்றுஞ்,
சற்குரு கோபந் தன்னேச் சமிப்பிக்க லொண்ணு தத்தாற்,
சற்குரு நாதன் பாதந் தப்பிடான் முத்த னன்றே.

(இ-ள்.) சத் குரு - நல் லாசிரியர், பரசிவன் - பரம சிவமே யாவர், ஆயினும் - (அங்ஙனம்) ஆயினும், வாசி - ( ஒரு விதத்தில் குருவுக்கு உள்ள) அதிகத் (உயர்வாந்) தன்மையினே, சாற்றில் - சொல்லுமிடத்து, சிவன் - (பரம) சிவன், கோபித்தால் - கோபிக்கில், சத் குரு - நல்லாசிரியர், சமிப்பிக்கும் - (அக்கோபத்தினே) நிவிர்த்தி செய்விப்பர், சத் குரு - நல் லாசிரியரது, கோபம் தன்னே - கோபத்தினே, என்றும் - எப் பொழுதும், சிவஞல் - (பரம) சிவத்தால், சமிப்பிக்கல் - நிவிர்த்தித்தல், ஒண்ணுது - முடியாது, அத்தால் - அக் காரணத்தினுல், சத் குரு நாதன் - (அத் தகைய) நல் லாசிரியரது, பாதம் - திரு வடியினின்றும், தப்பிடான் - நீங்காதவன், முத்தன் - மோக்ஷம் அடைந்தவன் ஆவன். (எ-று.)

(இ-பு.) சிவன் ருன் - தான் - அசை நிலை. ஆயினும் - உம் - உயர்வு சிறப்பு. கோபந்தன்னை - தன் சாரியை- அது - அத்து - என விகாரப்பட்டது. தப்பிடான் - வினையா லணையும் பெயர். அன்றே - அன்று - ஏ இரண்டும் அசை நிலைகள். சற் குரு - எழுவாய், சமிப்பிக்கும் - பய னிலை. அக் கோபம் - செயப்படு பொருள். (இது அவாய் நிலையால் வருவிக்கப்பட்டது.) சமிப்பிக்கல் - எழுவாய், ஒண்ணாது - பய னிலை. தப்பிடான் - எழுவாய், முத்தன் - பய னிலை.

## சொரூபாநந்த சித்தி (பிரமஹ்ம கீதை–12–18)

38. அருவெனு மமலன்ரு னருளில னெனினுஞ்சார்,
குருபர னருளுண்டே யெனிலொரு குறையுண்டோ,
திருவடி தரவந்தார் திருவுள மிலரேன்ரு,
லொருவரு மிலர்கண்டி ருறுதுயர் களைகின்ருர்.

(இ-ள்.) அரு - சூக்ஷ்மம், எனும் - ஆகிய, அமலன் - நிர்மல (பரமசிவ)னது, அருள் - அநுக்கிரகம், இலன் - (ஒரு சிஷ்யன்) இல்லாதவனாக, எனினும் - இருப்பினும், சார் - (சரணாகதியாகப்) பொருந்திய, குரு பரன் - ஞாநாசிரியரது, அருள் - அநுக்கிரகம் (ஒன்று), உண்டே - இருக்குமே, எனில் - ஆயின், ஒரு குறை - (அவனுக்கு யாதேனும்) ஒரு குறைவு, உண்டோ - உளதோ? (இல்லை என்றபடி), திரு அடி - பாத தாமரையினை, தர - தருதற்கு, வந்தார் - (இவ் வுலகின்கண் எழுந்தருளி) வந்த குருமூர்த்தியினது, திரு உளம் - அநுக்கிரகம், இலர் - (ஒருவர்) இல்லாதவர், என்ருல் - ஆயின், உறு - பொருந்தியிருக்கின்ற, துயர் - (அவரது) துன்பத்தினை, களைகின்ருர் - நிவிர்த்திப்பவர், ஒருவரும் - எவரும், இலர் - இல்லை.

(இ-பு.) அமலன் ருன் - தான் அசை நிலை. எனினும் - உம - இழிவு சிறப்பு. உண்டே - ஏ - தேற்றம். உண்டோ - ஓ எதிர் மறை. வந்தார் - வினையா லணையும் பெயர். ஒருவரும் - உம் - முற் றும்மை.

கண்டீர் - முன் னிலை அசை. களைகின்றார் - வினையாலணையும் பெயர். குறை - எழுவாய், உண்டோ - பய னிலை. ஒருவரும் எழுவாய், இலர் - பய னிலை. (இது 36வது சுலோகப் பொருள்.)

## ரிபு கீதை (42-10)

39. குருபரனே பரமசிவன் பரேசன்றானே குருபரனு மாகினுமே யொருகாலத்தி, னிருமலமாம் பரமசிவன் முனிவுற்றாலு நிகரில்தயா நிதியான குரவன்காப்ப, னருள் வடிவே திருவுருவா யெழுந்துநின்ற வாசிரிய னென்றேனு முனிவுற்றானேற், றிரிவிதமா முலகத்து மம்மாணனைத் தியக்கமெலாந் தீர்த்தெவருங் காப்பதில்லை.

(இ-ள்.) குருபரனே - ஆசாரிய சிரேஷ்டரே, பரம சிவன் - ஈசுவர ருவர், பரேசன் தானே - (அவ்) ஈசுவரனே, குருபரன் ஆம் - ஆசாரிய சிரேஷ்டர் ஆவர், ஆகினும் - (பரஸ் பரம்) பேதம் இன்றி யிருப்பினும், ஒரு காலத்தில் - ஒரு சமயத்தில், நிருமலம் ஆம் - நின்மல னாகிய, பரம சிவன் - ஈசுவரன், முனிவு - கோபத்தினை, உற்றாலும் - பொருந்தின னாயினும், நிகர் இல் - ஒப் பில்லாத, தயா நிதி யான - கிருபாநிதியாகிய, குரவன் - ஆசாரியர், காப்பன் - (சீடனை) ரக்ஷிப்பர், அருள் வடிவே - கிருபா சொரூபமே, திரு உருவு ஆய் - திவ்விய மங்கள மூர்த்த மாய், எழுந்து நின்ற - எழுந் தருளி வந்த, ஆசிரியன் - ஆசாரியர், என்றேனும் - எப்போதாயினும், முனிவு - கோபத்தினை, உற்றானேல் - பொருந்தின ராயின், திரி விதம் ஆம் - (ஸ்வர்க்க மத்திய பாதாள மென்னும்) மூ வகை யாகிய, உல கத்தும் - உலகத்திலும், அம் மாணனை - (குரு கோபம் உற்ற) அந்தச் சிஷ்யனை, தியக்கம் - (அவனுடைய) மயக்கம், எலாம் - அனைத்தையும், தீர்த்து - நிவிர்த்தித்து, எவரும் - ஒருவரும், காப்பது - ரக்ஷிப்பது, இல்லை - இல்லையாம். (எ-று)

(இ-பு-) பரனே - ஏ. அசை நிலை. பரேசன் றானே - தான்- ஏ - இரண்டும் அசை நிலைகள். ஆகினுமே - உயர்வு சிறப்பு. ஏ - அசை நிலை. உற்றாலும் - உம் - உயர்வு சிறப்பு- வடிவே - ஏ - பிரி நிலையும், தேற்றமுமாம். என்றேனும் - உலகத்தும் - எவரும் - உம் மூன்றும் முற் றும்மைகள். குரவன் - எழுவாய், காப்பன் - பய னிலை. மாணன் - செயப்படு பொருள். காப்பது - எழுவாய்) இல்லை- பய னிலை.

## ரிபு கீதை (42-9)

40. தந்தைமுதற் பெந்துவெலா மநந்த தேகந் தருவதலா லநாதிபவ பந்தந் தீர்க்கார், சிந்தையினு லாய்ந்திடிலப் பெந்து வெல்லாஞ் சிறுமைதருஞ் சத்துருவே யாகா நிற்ப, ரந்தமிலா வருள்வடிவாங் குருவோ வென்று லகண்டபர ஞாநத்தை யருளா னல்கித், தொந்தமதா மநாதிபவ பந்த மெல்லாந் துப்பறவே நன்றாகத் துடைத்துக் காப்பன்.

(இ-ள்) தந்தை - பிதா, முதல் - முதலிய, பெந்து - பந்துக் கள், எலாம் - யாவரும், அநந்த - எல்லை யின்றிய, தேகம் - சரீரங் களை, தருவது - கொடுக்கின்றார்களே, அலால் - அன்றி, அநாதி - தொன்று தொட்டு வாராநின்ற. பவம் - சம்சார மாகிய, பந்தம் - கட்டினை, தீர்க்கார் - நிவிர்த்திக்க மாட்டார்கள், சிந்தையினுல் - மநத்தினுல், ஆய்ந்திடில் - விசாரிக்கு மிடத்து, அப் பெந்து - அந் தப் பந்துக்கள், எல்லாம் - யாவரும், சிறுமை - (ஜநந மரண ரூப) துக்கத்தினை, தரும் - தருகின்ற, சத்துருவே ஆகாநிற்பர் - சத்து ருக்களே யாகி நிற்பார்கள், அந்தம் இலா - நித்திய, அருள் - கிருபா, வடிவு ஆம் - ஸ்வரூபி ஆகிய, குருவோ - ஆசாரியரோ, என்றால் - எனின், அருளால் - கருணையினுல், அகண்ட - முப் பரிச் சேத மற்ற, பர ஞாநத்தை - பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை, நல்கி - (சிஷ்யனுக்கு) அநுக்கிரகித்து, தொந்தமது ஆம் - துவந்துவங்களா

கிய, அநாதி - அநாதி (கால), பவ பந்த - சம்சாரக் கட்டாகிய, துப்பு எல்லாம் - கறை அனைத்தையும், அறவே - (முற்றாக, அல்லது) அத்தியந்தம், நன்றாக - செவ்வையாக, துடைத்து - நிவிர்த்தித்து, காப்பன் - ரக்ஷிப்பர். (எ-று.)

(இ-பு) சத்துருவே - ஏ - தேற்றம், ஆகாநிற்பர் - 'ஆகா' என்பது, ஆ விகுதி பெற்ற செய்யா தென்னும் வாய்பாட்டு உடன் பாட்டு இறந்த காலத் தெரி நிலை, வினை எச்சம். குருவோ ஓ - எதிர் மறை. தொந்தமது - அது - பகுதிப் பொருள் விகுதி. துப்பறவே - ஏ - தேற்றம். பெந்து எலாம் - எழுவாய், தீர்க்கார் - பய னிலை. பந்தம் - செயப்படு பொருள்- பெந்து எல்லாம் - எழு வாய், ஆகாநிற்பர் - பய னிலை. குரு - எழுவாய் - காப்பன் - பய னிலை. சீடன் - செயப்படு பொருள் - (இது அவாய் நிலையால் வரு விக்கப்பட்டது.)

சோரூபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை–12–20)

41. இந்தவி டும்பையு டம்புறு மேது,
தந்தையே னப்புகழ் கின்றிலர் தக்கோர்,
அந்தமி லதாவ கண்டமு நம்முட்,
டத்தவர் தந்தையே னச்சமை வுற்றார்.

(இ-ள்) தக்கோர் - பெரியோர்கள், அந்தம் - நாசம். இலாத - இன்றிய, அகண்டமும் - முப் பரிச்சேத ரகித பிரத்ய கபிந்ந பரமாத்மாவையும், நம்முள் - நமக்கு, தந்தவர் - (உபதேசவாயிலாய்) அருளிய குருவே, தந்தை - பிதா, என - என்று (கூறி), சமை வுற்றார் - அமைந்தனர், இந்த - இப் பிரத்தியக்ஷமாக வுள்ள, இடும்பை - துக்கத்தினை (பொருந்திய), உடம்பு - சரீரத்தினை, உறும் - பொருந்துதற்கு உரிய, ஏது - நிமித்த காரண மாக (உள்ள வரை); தந்தை - பிதா, என - என்று, புகழ்கின்றிலர் - (பெரியோர் கள்) துதிக்கின்றார்க ளில்லை, (அஷ்டைசுவரியங்கள், கந்தர்வாதி

பதம், சார்வபௌமம், மந்திர தந்திராதி லௌகிக உபாயம் முதலியவற்றைக் கொடுப்பவர் துக்கத்தினைக் கொடுப்பவர் ஆகலின் உண்மைத் தந்தை (குரு) ஆகார்.) (எ-று)

(இ-பு.) ஏது - ஆகுபெயராய் ஏதுவாயுள்ளவரைக் குறித்து நின்றது. அகண்டமும் - உம் - இறந்தது தழீஇயது. (முந்திய பந்த நிவிர்த்தியும் தழுவப்படுதலின்.) தந்தவர் - வினையாலணையும் பெயர்- நமக்கு என நான்கனுருபு நிற்கவேண்டிய இடத்து, உள் என்னும் ஏழனுருபு நின்றமை உருபு மயக்கம். தக்கோர் - எழுவாய், புகழ்கின்றிலர் - பயனிலை. ஏது - செயப்படுபொருள். தக்கோர் - எழுவாய், சமைவுற்றார் - பயனிலை. (37, 38, 39, 40 நாலு சுலோகார்த்தமும் மூலத்தில் இருக்கிறது.)

## மெய்ம் மொழி.

42. குருபாதம் பூசி நாளுங் குருநாமஞ் செபியெப் போதுங், குருபாதந் தியானம் பண்ணு குருகீர்த்தி தோத்திரஞ்செய், குருபாத நினைக்கத் தீருங் குருததோட மல்லாத் தோடங், குருபாதந் தன்மே லுண்டோ குருவின்பேர் சிவனு மன்றே.

(இ-ள்.) குருவின் - ஆசாரியரது, பேர் - நாமம், சிவன் ஆம் - சிவன் என்று சொல்லப்படும், குரு - ஆசாரியரின், பாதம் - திரு அடிகளினும், மேல் - உயர்வாக, உண்டோ - (வேறு பொருள் உலகத்தில்) இருக்கின்றதா? (இல்லை என்றபடி.) குரு - ஆசாரியரது, பாதம் - திரு அடியினை, நினைக்க - ஸ்மரிக்க, குரு - ஆசாரியருக்குச் (செய்த), தோடம் - குற்றமும், அல்லா - (அஃது) அல்லாத, தோடம் - குற்றங்களுமாகிய (யாவும்), தீரும் - நிவிர்த்தியாகும்; (ஆதலினால்), நாளும் - தினந்தோறும், குரு - ஆசாரியரது, பாதம் - (திரு) அடியினை, பூசி - பூசிப்பாயாக, எப்போதும் - சதா காலமும்,

குரு - ஆசாரியரது, நாமம் - (திரு) நாமத்தினை, செபி - செபஞ் செய்வாயாக, குரு - ஆசாரியரது, பாதம் - (திரு) அடியினை, தியா நம் - சிந்தனை, பண்ணு - (எப்போதும்) செய்வாயாக, குரு - ஆசாரியரது, கீர்த்தி - பெருமையினை, தோத்திரம் செய் - (எப்போதும்) துதிப்பாயாக. (எ-று)

(இ-பு.) நாளும் - எப்போதும் - உம் - இரண்டும் முற்றும்மை கள். எப் போதும் - என்றது, தியாநம் பண்ணு, தோத்திரம் செய் என்பவற்றோடும் சென்றியைதலின் முதநிலைத் தீபகம். தோடம் அல்லாத் தோடம் - என்புழி, எண் ணும்மைகள் தொக்கன. குரு பாதம் தன் மேல் - தன் - சாரியை. உண்டோ . ஓ - எதிர் மறை அன்றே - அன்று - ஏ - இரண்டும் அசை நிலைகள். நீ - தோன்றா எழுவாய், பூசி - பய னிலை. பாதம் செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய், செபி - பய னிலை. குரு நாமம் - செயப்படு பொருள். நீ தோன்றா எழுவாய், தியாநம் பண்ணு - பய னிலை. பாதம் - செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய், தோத்திரஞ் செய் - பய னிலை. குரு கீர்த்தி - செயப்படு பொருள். பூசிக்க, செபிக்க, பண்ணுக, செய்க, என்பன வியங்கோள் விகுதி குறைந்து நின்றன- குருத் தோடம் அல்லாக் தோடம் - எழுவாய், தீரும் - பய னிலை- உம்மைகள் தொக்கன. வேறு பொருள் - தோன்றா எழுவாய், உண்டோ - பய னிலை. பேர் - எழுவாய், ஆம் - பய னிலை.

## சொரூபாநந்த சித்தி (பிரஹ்ம கீதை-12-23)

43. வருபிறப் பறவே வேண்டினுன் மறையீ றென்னுமம் புயத்தினை மலர்த்தற், கிரவியாய் நெஞ்சிற் கிசைந்தநற் குருவை யாதோரு வழியினு லிறைஞ்சி, யருள்சுரந் திடுதற் காவதே செய்வா னருமறை முடிவெலா மறையும், பொருளினே ராக வெமக்கெனக் கீசன் புகன்றவப் படியிலே புகன்றேன்.

(இ-ள்.) வரு - (தனது கருமாதீனமாக) வருகின்ற, பிறப்பு ஜநந (மரண சம்சாரம்), அற - நீங்க, வேண்டினன் - விருப்புடைய அதிகாரி, மறை ஈறு - வேதாந்தம், என்னும் - ஆகிய, அம்புயத்தினை - தாமரைப் புஷ்பத்தினை, மலர்த்தற்கு - விரியச் செய்வதற்கு, இரவி ஆய் - சூரியனும், நெஞ்சிற்கு - (தன்) மனத்திற்கு, இசைந்த- பொருத்தமாயுமுள்ள, நல் - நல்ல, குருவை - ஆசாரியரை, யாது ஒரு வழியினால் - (குரு வழிபாட்டிற் கேற்ற) ஏதேனு மொரு விதத்தினால், இறைஞ்சி - வழிபட்டு, அருள்-(அவர்) கிருபை, சுரந்திடுதற்கு- பயத்தற்கு, ஆவது - ஆக வேண்டியதை, செய்வான் - செய்துமுடிப்பான், அரும் - அரிய, மறை முடிவு - வேதாந்தங்கள், எலாம் - யாவும், அறையும் - கூறும் - பொருளை - (பிரஹ்ம) வஸ்துவினை, எனக்கு - எனக்கு, ஈசன் - பரசிவன், புகன்ற - உபதேசித்த, அப் படியிலே - அவ் வாறே, உமக்கு - (இருவிக ளாய) உங்கட்கு, நேர் ஆக - சாக்ஷாத்தாக, புகன்றேன் - (பிரமா வாகிய யான்) கூறினேன். (எ-று)

(இ-பு.) அறவே - ஆவதே - ஏ - இரண்டும் அசை நிலைகள். வேண்டினன் - வினையா லணையும் பெயர். சுரந்திடுதல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. படியிலே - ஏ - தேற்றம். மறை யீற்றை அம்புயம் எனவும், குருவை இரவி எனவும் உருவகம். ஆவது - வினையா லணையும் பெயர். வேண்டினன் - எழுவாய், செய்வான் - பய னிலை. ஆவது - செயப்படு பொருள். யான் - தோன்றா எழுவாய், புகன்றேன் - பய னிலை. பொருள் - செயப்படு பொருள். (இது மூலத்தில் 45,46 சுலோகங்களின் பொருளாக இருக்கின்றது.)

## (ரிபு கீதை (42-13)

44. ஆசிரியன் முன்பாக வகண்டார்த தத்தை யடைவாக வறிவுற்ற மாணனந்தத், தேசிகனைத் திரவியமே முதலிருந்துந் திடமான லோபத்தாற் பூசியானேன், மோச

நமே யிலாதவனுய்க் கும்பிபாக முதலியதில் வீழ்ந்திடுவ ஞதலாலே, தேசிகனை யாவிபொரு ளாக்கையாலே திகந்திந மும் பூசிக்க வேண்டுமாணுன்.

*(இ-ள்.) ஆசிரியன் - குருவின், முன்பு ஆக - சந்நிதானத்தில், அகண்ட அர்த்தத்தை - பிரஹ்மப் பொருளை, அடைவு ஆக - (சாஸ்திரத்திற் கூறிய) முறையாக, அறிவு உற்ற - உணர்ந்த, மாணுன் - சிஷ்யன், அந்த தேசிகனை - (தனக்குப் பிரஹ்மப் பொருளை உபதேசித்த) அக் குருவினை, திரவியம் முதல் - பொருள் முதலியன, இருந்தும் - (தன்னிடத்து) இருந்தும், திடம் ஆன - திடம் பொருந்திய, லோபத்தால் - ஈயாத் தன்மையால், பூசியானேல் - பூசியாதிருப்பா ஞகில், மோசநமே இலாதவன் ஆய் - விடுதலையே இல்லாதவ ஞய், கும்பி பாகம் முதலியதில் - கும்பிபாக முதலாய(நரகத்)தில், வீழ்ந்திடுவன் - வீழ்ந்து கிடப்பான், ஆதலால் - ஆகையால், மாணுன் - மாணுக்கன், தேசிகனை - குருவினை, திகம் திகமும் - பிரதிதிநமும், ஆவி பொருள் ஆக்கையால் - உயிர் பொருள் உடல் மூன்றிஞலும், பூசிக்க வேண்டும் - பூசை செய்க. (எ-று)*

*(இ-பு,) திரவியமே - ஆதலாலே - ஆக்கையாலே - ஏ - மூன்றும் அசை நிலைகள்- முதல் இருந்தும் - உம் - உயர்வு சிறப்பு. முதலன என்னு மஃறிணைப் பன்மைப் பெயர் முதல் எனப் பகுதி மாத்திர மாக நின்றது. மோசநமே - ஏ தேற்றம். முதலியதில் - பன்மையில் ஒருமை மயக்கம். திகந் திநமும் - உம் - முற்றும்மை. மாணுன் - எழுவாய், வீழ்ந்திடுவன் - பய னிலை. மாணுன் - எழுவாய், பூசிக்க வேண்டும் - பய னிலை. தேசிகன் - செயப்படு பொருள்.*

## சிவ நெறிப் பிரகாசம்.

45. தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந் திடவே சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்து, மேசிலராம் பெரியோரை யீநமாந் தொழிற்கே யிசைத்து

மடித் தும்வைது மிவ்வாறு செயவுங், கூசியிடா திட்டபணி செய்துகுரு பத்தி, குறைவிலராய் நம்பினராய்த் துரோக மின்றி, மாசிலராய் மநவாக்குக் காயத்தாற் குருவின் வாக் கியபா லநஞ்செய்பு மதிமானு மாயே.

(இ-ள்.) தேசிகரும் - ஆசாரியரும், மாணவர்கள் - 'சிஷ்யர் கள், செய்தி - (பக்குவத்) தன்மையினை, உணர்ந்திட - அறியும் பொருட்டு, சிறியோரை - சிறியவர்களை, பெரியோர் - மஹான்கள், செய் - செய்கின்ற, தொழிலதனில் - செயல்களில், செறித்தும் - சேர்ப்பித்தும், ஏசிலர் ஆம் - குற்ற மற்றவ ராகிய, பெரியோரை - பெரியோர்களை, ஈநம் ஆம் - இழிவு ஆகிய, தொழிற்கு - செயல் களில், இசைத்தும் - சேர்ப்பித்தும், அடித்தும் - தாடநஞ் செய் தும், வைதும் - நிந்தித்தும், இவ் வாறு - இவ் விதம், செயவும் - செய்யினும், கூசியிடாது - (மநத்தின்கண் அவை குறித்துச்) சங் கோசத்தினை அடையாது, இட்ட - (ஆசாரியர்) கொடுத்த, பணி - கைங்கரியத்தினை, செய்து - இயற்றி, குரு - ஆசாரிய, பத்தி - பக்தி, குறைவிலர் ஆய் - குறையாதவர்களாய், நம்பினர் ஆய் - விசுவாசம் உடையவர்களாய், துரோகம் - (குருத்) துரோகம், இன்றி - இல்லாமல், மாசு இலர் ஆய் - குற்றம் இன்றியவர்களாய், மந வாக்கு காயத்தால் - மநம் வாக்கு காயம் என்னும் முக் காரணங்களினாலும், குருவின் - ஆசாரியரது, வாக்கியம் - வாக்கியத்தினை, பாலநம் - பேணுதல், செய்யும் - செய்கின்ற, மதிமானும் ஆய்-புத்தி புடையவ ராய் (இருந்து குரு கிருபையினால் பிரஹ்மப் பிராப்தி யுறக் கடவர்.)

(இ-பு.) தேசிகரும் - உம் - இறந்தது தழீஇயது. (குரு லக்ஷ ணத்தைச் சீடன் ஆராய்தலைத் தழுவுதலின்.) உணர்ந்திடவே - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏ - அசை நிலை. தொழிலதனில் - அது பகுதிப் பொருள் விகுதி. அன் - சாரியை. செறித்தும், இசைத்தும், அடித்தும், வைதும் — உம் - நான்கும் எண்ணுப் பொருளன. தொழிற்கே - ஏ - அசை நிலை. செயவும் - உம் - இழிவு

சிறப்பு. கூசியிடாது - இடு - பகுதிப் பொருள் விகுதி. குறைவிலர், நம்பினர், மாசிலர் என்பன, வினையா லணையும் பெயர்கள். மதி மானும் - உம் - அசை நிலை. மதிமான் பன்மையில் ஒருமை மயக்கம். இசை எச்சத்தால், "இருந்து குரு கிருபையினால் பிரஹ்மப் பிராப்திபுறக் கடவர்" என்பது வருவிக்கப்பட்டது. ஆய் - என்னும் வினை யெச்சத்தை, இருந்து உறக் கடவர் - எனக் கூட்டி முடிக்க. ஆயே - ஏ - ஈற் றசை. சீடர் - தோன்று எழுவாய், உறக் கடவர் பய னிலை. பிரஹ்மப் பிராப்தி - செயப்படு பொருள்.

## அருட் பிரகாசம்.

46. குருபர னுக்கவ னேஞ்சகம் போலநு கூலத்தனாய்க்,
கரசர ணாதியி னேவல்செய் தேதிநங் கட்கிமைபோ,
லுரியம னைமுத லியாவையுங் காத்துண்மை யாயொருதற்,
பரமிவ னேயெனக் காண்பான்சற் சீடன்ப கர்ந்திடினே.

(இ-ள்.) பகர்ந்திடின் - (சற் சீடரின் இயல்பு குறித்துச்) சொல்லுமிடத்து, சத் சீடன் - நன் மாணாக்கன், குருபரனுக்கு - ஆசாரியருக்கு, அவன் - அவரது, நெஞ்சகம் - மநம், போல் - ஒக்க, அநுகூலத்தன் ஆய் - சகாயம் உடையவனாய், கரம் சரண் ஆதியின் - (குருவின்) அஸ்த பாதாதி அவயவங்களினுடைய, ஏவல் - பணிகளை, திநம் - நாடோறும், செய்து - இயற்றி, கட்கு - நேத்திரத்திற்கு, இமை - (கண்)ணிதழ், போல் - (காப்பா யிருத்தல்) போல, உரிய - (ஆசாரியருக்கு) உரித்தாய் உள்ள, மனை - வீடு, முதல் - (பொருள்) முதலிய, யாவையும் - அனைத்தையும், காத்து - (தன் சொத்தைப் போல) ரக்ஷித்து, உண்மை ஆய் - யாதார்த்த மாக, ஒரு - ஒப்பற்ற, தத் பரம் - அந்தப் பிரஹ்மம், இவனே - இந்த ஆசாரியரே, என - என்று, காண்பான் - உணர்வான். (எ-று)

(இ-பு.) செய்தே - ஏ - அசை நிலை. சரணாதியின் ஏவல். ஆறும் வேற்றுமைத் தொகை. இன் - சாரியை. முதலியாவையும் -

இ - சாரியை. உம் - முற்றும்மை. இவனே - ஏ - தேற்றம். பகர்ந் திடினே - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏ - ஈற்றசை. சற்சீடன் - எழுவாய், காண்பான் - பய னிலை. குரு - செயப்படு பொருள் (அவாய் நிலையால் வருவிக்கப்பட்டது) கட் இமை போல் - உவமை யணி.

## அருட் பிரகாசம்.

47 தேசிகன் பாற்பற் பலதீக் குணங்கள் செறியினுநம், பாசப்பி ராந்திக்கி வைதோற் றியலிறை பாலிலையேன், ருசறு பத்தியி னோர்ந்தெவ் விதத்து மவனருளைத், தேசங்கு லவவ ளர்ப்போன்சற் சீடன்றெ ரிந்திடினே.

(இ-ள்) தேசிகன்பால் - ஆசாரியரிடத்து, பல் பல - அநேக, தீ - கெட்ட, குணங்கள் - இயல்புகள், செறியினும் - பொருந்தி (யிருப்பனவாகத் தோன்றி)னும், நம் - நம்முடைய, பாசப் பிராந்திக்கு - அறியாமையோடு (கூடிச் சலிக்கின்ற) பிராந்தி யுடைய மனதுக்கு, இவை - இக் குற்றங்கள், தோற்றிய - தோன்றின. தெரிந்திடின் - விசாரிக்குமிடத்து, இறைபால் - ஆசாரியரிடத்து, இலை - (உண்மையில் இக் குற்றங்கள்) இல்லை, என்று - என, ஆசு - அறு - குற்றம் அற்ற, பத்தியின் - பக்தியினால், ஓர்ந்து - உணர்ந்து, எவ் விதத்தும் - எவ் வாற்றாலும், அவன் - ஆசாரியரது, அருளை - கருணையினை, தேசம் - ஊர்க டோறும், குலவ - (அது) விளங்கும் படியாக, வளர்ப்போன் - விருத்திக்குக் கொண்டு வருபவனே, சற் சீடன் - நல்ல மாணாக்கன். (எ-று)

(இ-பு) செறியினும் - உம் - எதிர் மறை. எவ் விதத்தும் - உம் - முற்றும்மை, தெரிந்திடினே - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏ - ஈற்றசை. வளர்ப்போன் - வினையா லணையும் பெயர். வளர்ப் போன் - எழுவாய், சற் சீடன் - பய னிலை.

## அருட் பிரகாசம்.

48. விடையே றியீசன் வரின்மூ டருமவன் வேண்டியதைப்
படிமீ தளிப்பர் குருவே சிவமெனப் பாவனைமுற்
றுடையார் கடத்த முடலாவி யீந்திறை யுண்மைபெறத்
தடையா துளவிங் குளதே லபக்குவர் தாமவரே.

(இ-ள்.) ஈசன் - பரம சிவன், விடை ஏறி - இடப வாஹநா ரூடராய், வரின் - வருவா ராயின், மூடரும் - அறிவிலரும் கூட, அவன் - அப் பரம சிவன், வேண்டியதை - விரும்பியதை, படிமீது - பூமியின்கண், அளிப்பர் - கொடுப்பார்கள், குருவே -(அங்ஙன மாயின்) ஆசாரியரே, சிவம் - சிவ ஸ்வரூபம், என - என்ப தாக, பாவனை முற்று உடையார்கள் - பாவனை முதிர்ச்சி யுடையவர்கள், தம் தம் - தங்கள் தங்க ளுடைய, உடல் ஆவி - உடல் (பொருள்) ஆவிகளை, ஈந்து கொடுத்து, இறை - பிரஹ்ம, உண்மை - சாக்ஷாத்காரத்தினை, பெற - அடைய, தடை - விக்கிநம், யாது உள(து) - என்னை யிருக்கின்றது? (ஒன்றும் இன்று என்றபடி), உளதேல் - (தடை) இருக்குமாயின், அவர் - அம் மாணுக்கர், அபக்குவர் - பக்குவம் அற்றவரே யாவர். (எ-று.)

(இ-பு.) மூடரும் - உம் - இழிவு சிறப்பு. குருவே - ஏ - தேற்றம். முற் றுடையார்கள்- என்புழி, 'முற்றுதல்' என்னும் தொழிற் பெயர், தல் - விகுதி குறைந்து நின்று புணர்ந்தமை காண்க. உடையார்கள்- வினையா லணையும் பெயர். 'உட லாவி' - என்புழி, பொருள் - அவாய் நிலையால் பெற்றும்- வேண்டியது - வினையா லணையும் பெயர் யா துள - என்புழி, உள என்பது, துவ் வீறு குறைந்த அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினை முற்று. இங்கு - அசை நிலை. ஏ - ஈற் றசை. அபக்குவர் தாம் - தாம் - அசை நிலை. மூடர் - எழுவாய், அளிப்பர் - பய னிலை. வேண்டியது - செயப்படு பொருள். யாது - எழுவாய், உள(து) - பய னிலை- அவர் - எழுவாய், அபக்குவர் - பய னிலை.

ஒழிவி லொடுக்கம். பொதுவில் உபதேசம்—15

49. உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து,
விடிற்புலிதீப் பாம்பினில்வீழ் வார்க்காஞ்—சுடர்ச்சுடினும்,
வாழைக்கா காவேதி மட்கலத்திற் காகாவா,
றேழைக்கா காததி து.

(இ-ள்.) உடற்கு - உடம்பை, உயிர் - உயிர், போல் - (அபிமாநித்தல்) போல் (குருவை அபிமாநித்தும்), கட்டு - கண்ணே, இமை - இமையானது, போல் - (காத்தல்) போல் (அவரைக் காத்தும்), ஊசி -ஊசி (சென்ற இடந் தோறும்), நூல்-சரடு, ஒத்து -(பிறழாது பின் சேறல்) போல் (ஞானாசாரியரைப் பிரியாது பின் சென்று நின்று அவர் திருவுள்ளக் குறிப்பின்படியே ஒழுகி வழிபட்டும்), புலி - (அவர் பார்த்து) புலி, தீ - தீ, பாம்பினில் - பாம்பாதிகளில், விடின் - செலுத்தினும், வீழ்வார்க்கு - (பின் னடையாது அவை மேல்) விழும் அதிபக்குவர்க்கே, ஆம் - (இந்நூல்) உபதேசிக்க லாகும், சுடர் - (மிகுந்த) அக்கினியால், சுடினும் - (ஒருவன்) சுட்டாலும், வாழைக்கு - வாழைத் தண்டை, ஆகா - (சுடல்) முடியாத வாறு போலும், வேதி - (பரிசக) வேதியால், மண் கலத்துக்கு - மட் கலத்தைப் (பரிசித்து), ஆகா - (பொன் னாக்க) முடியாத, ஆறு-விதம் (போலும்), ஏழைக்கு - (அங்ஙனம் ஆசாரியரை வழிபடமாட்டாத) அபக்குவர்க்கு, இது - இந் நூலானது, ஆகாதது - உபதேசிக்கத் தகாத தாம்.)உபதேசிப்பினும் அவர்க்கு அநுபவம் சித்தியாது.)

(இ-பு.) உடற்கு - கட்கு - என்புழி, இரண்ட னுருபு நிற்க வேண்டிய விடத்து நான்க னுருபு வந்தமை உருபு மயக்கம். இசை எச்சத்தால் எஞ்சி நின்ற தாஷ்டாந்தங்கள் வருவிக்கப் பட்டன. வீழ்வார் - வினையா லணையும் பெயர். சுடினும் - உம் - இழிவு சிறப்பு. ஆகாதது - வினையா லணையும் பெயர். இது - எழுவாய், ஆம் - பய னிலை. இது - எழுவாய், ஆகாதது - பய னிலை. இதில் உவமை யணி உளது.

...ாசிட்டம். (நிருவாணப் பிரகரணம் – தேவ. பூசை கதை. 6. 2 — 58.)

50. ஆசான் மொழியா னூற்பொருளா லன்றிப் பெறலு மரிதாகுந், தேசார் குருநன் மாணுக்கன் சிறக்க விம்மூ வருங்கூடிற், பாசா தீதப் பரமெய்தும் பன்னு ணீங்கா விக்கூட்ட, மேசா வுணர்வைத் தரும்பகற்போ தேல்லாத் தொழிலுந் தருவதுபோல்.

(இ-ள்.) ஆசான் - குரு, மொழியால் - உபதேசத்தாலும், நூல் பொருளால் - சாஸ்திரார்த்தத்தாலும், அன்றி - அல்லாமல் (வேறு விதத்தால்), பெறல் - (ஆத்மாவினை) அடைதல், அரிது ஆகும் - முடியாத தாம், தேசு ஆர் குரு - மகத்துவம் பொருந்திய ஞானாசாரியர், நூல் - சாஸ்த்ரார்த்தம், மாணுக்கன் - சிஷ்யன் (என்னும்), இம் மூவரும் - இம் மூவரும், சிறக்க - நன்கு, கூடில் - சேர்ந்திருக்கில் - பல் நாள் - . நீ ணுள், நீங்கா - விட்டு நீங்காமல் (இடையீ டின்றி யிருக்கின்ற), இக் கூட்டம் - இந்தச் சேர்க்கை, பகல் போது - பகல் காலம், எல்லாத் தொழிலும் -(சீவர்க்குச்) சர்வ கிரியைகளையும், தருவது - உண்டாக்குவது, போல் - போல (விசாரத்தால்), ஏசா - குற்ற மற்ற, உணர்வை - (ஆத்ம) ஞானத்தை (சீடனுக்கு), தரும் - உண்டாக்கும், பாசம் அதீதம் பரம் - மாயாதீதப் பிரஹ்மம், எய்தும் - கிட்டும்படியான. (எ-று.)

(இ-பு.) பெறலும் - உம் - அசை நிலை. மூவரும் - தொழிலும் - உம் - இரண்டும் முற்று. பெறல் - எழுவாய், அரிதாகும் - பய னிலை. பரம் - எழுவாய், எய்தும் - பய னிலை. கூட்டம் - எழுவாய், தரும் - பய னிலை. உணர்வு - செயப்படு பொருள். இதில் உவமை யணி உளது.

வாசிட்டம் 6: நிர்வாணம் பிரஹரணம் 2-தேவ பூஜா உபாக்யா]
2வது சர்க்கம் 130—131-வது சுலோகம்.

**गुरूपदेशशास्त्रार्थैर्विना चात्मा न बुध्यते ।**
**एतत्सम्योगसत्तैव स्वात्मज्ञानप्रकाशिनि ॥ १३० ॥**

(இ-ள்.) "குரு உபதேசத்தாலும், சாஸ்திரார்த்தத்தாலும், அன்றி, ஆத்மா அறியப்பட மாட்டாது. இவற்றின் சேர்க்கையே தனது ஆத்ம ஞானத்தினை பிரகாசிப்பதாம்." (130)

**गुरुशास्त्रार्थशिष्याणाम् चिरसम्योगसत्तया ।**
**अहर्निवजमाचार आत्मज्ञानम् प्रवर्तते ॥ १३१ ॥**

(இ-ள்.) "குரு சாஸ்திரார்த்த சிஷ்யர்களின் நீண்ட காலச் சேர்க்கையினால் பகலில் உலக வியவகாரம் போல் ஆத்ம ஞானம் பிரவிர்த்திக்கின்றது." என்று இதன் மூலத்தில் கூறப்பட்டிருக்கின்றது. (131)

சீடாசாரம் மூலமும், பால போதினி என்னும்
உரையும், முற்றுப் பெற்றன.

